# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

..டர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 20 புதன்கிழமை (02-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:190


# நடேசனின் படுகொலையைக் கண்டித்து வடக்கில் இன்று பூரண துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

மூத்த தமிழ் ஊடகவியலாளரும் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்க உப தலைவருமான நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்து வடக்கில் இன்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஊடகவியலாளர் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பின் எல்லையில் அமைந்துள்ள தமது அலுவலகத்துக்கு சென்ற சமயம் வழியில் காத்திருந்த துப்பாக்கிதாரியின் சூட்டுக்கு இலக்காகிய நடேசன் அதே இடத்தில் உயிரிழந்தது தெரிந்ததே.

அவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு மட்டக்களப்பு நகரில் வாவிக்கரை வீதியில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது பூதவுடலுக்கு புலிக்கொடி போர்த்தப்பட்டிருந்தது.

பெருந்திரளான பொது மக்களும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஊடகவியலாளர்களும் அரசியல் பிரமுகர்களும் அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுததினர்.

பூதவுடல் நேற்று முற்பகல் 10 மணிக்கு வடக்கு நோக்கி எடுத்து வரப்பட்டது.

வவுனியாவின் மூன்று முறிப்பு

(18ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தத்தோடு காலத்தை இழுத்தடிக்கப் புலிகள் இடம்தரார்

## ஜனாதிபதியின் தந்திரோபாயத்தை முறியடிக்க கடும் முடிவெடுக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்

(நமது அரசியல் செய்தியாளர்)

**அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து பேணி வருகிறார்கள் விடுதலைப் புலிகள். அதனால், சமாதான நிலை தொடர்ந்து நீடிக்கின்றது. அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்காமலேயே இந்த சமாதான நிலையை நீடித்து, அதனோடு தமது ஆட்சிக் காலத்தைக் கொண்டிழுக்கவும் அதன்மூலம் தமது பிற அரசியல் இலக்குகளை அடையவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டிருக்கின்றார் என விடுதலைப் புலிகளின் தலைமை கருதுகின்றது எனத்தெரிகின்றது.**

**ஜனாதிபதியின் இந்த தந்திரோபாயத்துக்குப் பலியாகாமல் ஈழத் தமிழர்களின் அபிலாசைகளை எட்டுவதற்காகக் கடும் தொனியிலான நடவடிக்கைக்குத் தாங்கள் தள்ளப்படலாம் என்று விடுதலைப் புலிகளின் தலைமை கருதுகிறது எனவும் தெரியவருகின்றது.**

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் 2002 முற்பகுதியிலிருந்து இலங்கை அரசுப் படைகளுடன் யுத்த நிறுத்தத்தைப் புலிகள் பேணி வருகின்றார்கள்.

இந்த இரண்டரை வருட காலமாக யுத்தநிலை ஓய்ந்து - சமாதான நிலைமை நீடிக்கின்றது. ஆனால், அமைதிப் பேச்சுக்கள் குறிப்பிடத்தக்களவு கூட முன்னேறவில்லை அதுவும் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அமைதிப் பேச்சுக்கள் இடம்பெறவேயில்லை.

தமது கடும்பிடிப் போக்கின் மூலம் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முறியடித்துவருகின்றார் என்று விடுதலைப் புலிகளின் தலைமை கருதுகின்றது எனத் தெரிகின்றது.

அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்கவிரும்பாத - அதற்கான அரசியல் அதிகார வலுவில்லாத - அரசைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யுத்தநிறுத்த நிலையை ஒருபுறம் நீடித்துக்கொண்டே தனது ஆட்சிக் காலத்தைக் கொண்டிழுக்கலாம் என

(18ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியிலுள்ள ஊடகப்பிரிவில் நடேசனின் பூதவுடல் நேற்று இரவு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்டபடம்.

# கிழக்கில் இன்று ஹர்த்தால்

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலையைக் கண்டித்து கிழக்கில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக மட்டு - அம்பாறை பொது அமைப்புக்கள் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளன. (எ-9)

# குடாநாட்டில் இவ்வாரம் எதிர்ப்பு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்தும் -

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இத்தகைய கொலைகள் தொடரக்கூடாது என்று கோரியும் - குடாநாட்டில் ஒருவாரத்துக்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூன்2

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளின் அலுவலகம் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து 30 கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் மண்டூர் பிரதேசத்தில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு இனம்

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. – சுதந்திரக் கட்சி முரண்பாட்டை நீக்கக் குழு!

## ஜனாதிபதி மாளிகையில் நள்ளிரவு வரை சந்திப்பு

கொழும்பு,ஜூன்2

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகளை நீக்கவும் இரு கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும் உயர் மட்டக்குழு ஒன்று அமைககப்படும்.

நேற்று முன்தினம் இரவு இரு கட்சிகளின் சிரேஷ்ட உறுபபினர்களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இப்பேச்சுக்களில் சுதந்திரக்கட்சியின் சார்பில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மங்கள சமரவீர ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா,

(18ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் திட்டமிட்ட ஆதரவுடனேயே நடேசன் படுகொலை செய்யப்பட்டார்!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஜூன்2

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை இலங்கை அரசினதும் மற்றும் அரச படைகளினதும் ஆதரவோடு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சியில் வைத்து ஊடகவியலாளர்களிடம் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் படுகொலையையிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளும், தலைமையும் மிகவும் அதிர்ச்சியும் வேத

(18ஆம் பக்கம் பார்க்க)


மாதத்திற்கு 1.25% தான்

தங்க



தேசிய சேமிப்பு வங்கியின் ரன்சஹான அடகுச் சேவைக்கு மாதாந்த வட்டி 1.25%

- ஒரு தங்க பவுனுக்கு ரூ.9000
- இலகு அடிப்படையில் மீட்டெடுப்பதற்கான வசதி
- துரித சேவை
- இரகசியமாக இருக்கும்
- தங்க ஆபரணங்களுக்கு அரச வங்கியின் உத்தரவாதம்
- தங்க ஆபரணங்கள் சுரண்டிப் பார்க்கப்படமாட்டாது
- நாடெங்கிலும் 100 கிளைகள்

NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

PHOENIX O&M 9810

# முத்த தமிழ் ஊடகவியலாளர் நடேசனின் படுகொலைக்கு பொது அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்துப் பொது அமைப்பினரும் அரசியல பிரமுகர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

அவற்றின் விவரம் வருமாறு:-

**திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம்**

மட்டக்களப்பு பத்திரிகையாளர் ஐ.நடேசன் திங்கட்கிழமை காலை சுட்டுக்கொல்லப்பட்டமை பத்திரிகை உலகிற்கு விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தலாகும். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு இச்செயல் பெரும் தடையாக இருக்கின்றது. இச்சம்பவத்தையிட்டு எமது சங்கம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனைவரும வாய்ப்பு வழங்க வேண்டும். நடேசனின் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படல் வேண்டும். பாரபட்சமற்ற விசாரணைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் பேணப்படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் உறுதுணை புரிய வேண்டும்.

**கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகம**

தென் தமிழீழம், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் தமிழ்த் தேசிய விரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட செய்தி எமக்கு ஆழ்ந்த கவலையையும அதிர்ச்சியையும் தருகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலு சேர்ப்பதில், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அல்லல்களையும் அனர்த்தங்களையும் வெளியுலகுக் கொண்டு வருவதில் தமிழ் ஊடகவியலாளர்களே முன்னின்று உழைத்து வருகிறார்கள். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள தங்களது உயிருக்கு ஆபத்து உள்ள நிலையிலும் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டப் பக்கம் நின்று அதிலுள்ள நியாயத்தையும் நீதியையும் அனைத்துலக அரங்கில் கொண்டு வருவதில் பெரும் பங்கு வகித்து வருகிறார்கள்.

யுத்தகாலத்தில் இடம்பெறாத இத்தகைய தொடர் கொலைகள் அமைதிக் காலத்தில் நடைபெறுவது எமக்குக் கவலையையும் ஏமாற்றத்தையும் அளிக்கிறது.

இந்தப் படுகொலையை செய்த அரசபடையினரின் கைக்கூலிகளையும் அவர்களுக்குப் பின்னின்று செயற்படும் தமிழ்த் தேசிய விரோத சக்திகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்-தமிழ்**

மூத்த ஊடகவியலாளர், ஐ.பி.சி. தமிழின் மூத்த குடும்ப உறுப்பினர் ஜி.நடேசன் அவர்களின் இழப்புச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். வார்த்தைகள் அற்று விறைத்துப் போனோம்.

தமிழ்த் தேசியத்தின் பற்றுடன் செயற்பட்டு வந்த ஜி.நடேசன், ஸ்ரீலங்கா அரசால் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை அனைத்துலக நாடுகளுக்கு வெளிக்கொண்டு வந்த ஒரு செய்தியாளர். செய்யும் பணியை செவ்வனே செய்ய வேண்டும் என்பதில் தளராத உறுதியுடன் செயற்பட்டு வந்தவர். ஐ.பி.சி. தமிழின் செய்தித் துறையில் பெரும் பங்காற்றிய ஒரு மனிதர்.

இத்தகையதோர் எமது ஊடகவியலாளரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையை ஐ.பி.சி தமிழ் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஐ.பி.சி. தமிழின் முன்னாள் யாழ்ப்பாணச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் வரிசையில் ஐ.பி.சி. இனனொரு குடும்ப உறுப்பினரை அராஜகத்துக்குப் பலிகொடுத்துள்ளது.

இலங்கையில் அனைத்துலக அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு சூழ்நிலையில், ஊடகவியலாளர் ஜி.நடேசன் அராஜகவாதிகளால் கொலை செய்யப்படுவதற்கான பின்னணி குறித்து ஐ.பி.சி. சந்தேகம் வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டு.-அம்பாறை மாவட்டத்தில் இயல்பு வாழ்வை மீண்டும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு சூழ்நிலையில், ஜி.நடேசன் மீதான கொலை இத்தகைய முயற்சிகளுக்கு பெரும் பாதிப்பினையே ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**வி.ஆனந்தசங்கரி**

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலை செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தேன். கிழக்குப் பல்கலைக் கழக பொருளியல் பீடத் தலைவர் அமரர் குமாரவேல் தம்பையாவின் சாம்பல் ஆறுவதற்கு முன் மற்றுமோர் ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டமை தமிழ்ச் சமுதாயம் எங்கே போகிறது என்று என்னைப் போன்றவர்களை மட்டுமல்லாது சர்வதேச சமூகத்தையே எண்ண வைக்கிறது.

பல இழப்புகளைச் சந்தித்த ஒரு மாபெரும் ஜனநாயக கட்சியின் தலைவன் என்ற நிலையில் அமரத்துவமடைந்த ஜி.நடேசனின் ஆத்மாவின் பேரில் சகல தரப்பினரையும் இனியாவது கருத்துச் சுதந்திரங்களுக்கு மதிப்பளித்து ஒரு நல்ல ஆரோக்கியமான அரசியல் சூழலை எங்கள் மண்ணில் உருவாக்க ஆயுத கலாசாரத்தை நிறுத்தி உண்மையான ஜனநாயக வழிக்கு திரும்பவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்

**ஈ.பி.டி.பி**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழராகப் பிறந்தவர் எவரும் தனது வாழ்நாள்களைப் பூரணமாக அனுபவிக்கவேண்டும். எத்தகைய காரணங்கள் இருப்பினும் வாழும் உரிமையை மறுதலிக்கும் வகையில் கொலலப்படுவது கொடூரமானது. ஆனால், பொதுவான இவ்விதியைக் கூடப் புரியாத வகையில் ஒரு போக்கு தமிழர் அரசியலில் மேலோங்கிவிட்டிருக்கிறது.

இந்தப்போக்கு புத்தி ஜீவிகளையும் ஊடகவியலாளர்களையும் கூடப பலியெடுக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. ஆதலால் ஆயுத முனையிலான அராஜகங்களுக்கு முடிவுகட்டவும் முற்றுப்புள்ளி வைக்கவும் ஒவ்வொருவரும் தத்தம் பங்களிப்பைத் துணிவுடன் ஆற்ற முன்வரவேண்டும். அப்போதுதான் படுகொலைகள் முடிவுக்கு வருவதுடன் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக வாழும் சூழல் உருவாகவும் வழி ஏற்படும்.

**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை**

எமது தேசிய விடுதலைப்போராட்டத்தின் எழுச்சியினை உண்மையோடும் நேர்மையோடும் வெளிக்கொணர்ந்த மூத்த பத்திரிகையாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டமை மிகுந்த வேதனைக்குரியது. போராட்ட காலத்திலும் சரி சமாதான காலகட்டத்திலும் சரி, தமிழர் தரப்பு போராட்ட நியாயப்பாடுகளை பேனா முனையில் வெளியுலகிற்கு கொண்டுவந்தவர் பத்திரிகையாளர் நடேசன்.

தேசிய விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும் சந்திரிக்கா அம்மையாரின் ஈனச் செயற்பாட்டின் ஒரு வடிவமாகவே இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது. அன்று அம்மையாரின் ஆட்சிக்காலத்திலேயே உண்மையோடும் நேர்மையோடும் செயற்பட்ட நிமலராஜன் இராணுவத்தினதும் கைக்கூலிகளினதும் உதவியோடும் கொல்லப்பட்டார். மீண்டும் அதே கைங்கரியமே தற்போதைய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. கல்வி மான்களையும் புத்தி ஜீவிகளையும் படுகொலை செய்வதனூடாக தமிழினத்தை நசுக்கிவிடலாம் எனக் கனவு காணும் அம்மையார் மீண்டும் இந்த மண்ணில் போர் தொடங்குவதற்கே வழிசமைத்துள்ளார்

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழர் படுகொலை செய்யப்படுவதும் அதனைத் தடுக்க முடியாது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் இருப்பும், இருப்புக்கான அர்த்தத்தை விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது. தமிழர் கொலை செய்யப்படுவதனைத் தடுக்க முடியாத கண்காணிப்புக் குழுவும் சர்வதேச உலகமும் தமிழர் தாயக பிரதேசங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

கருணாவும் கருணாவின் அடியாளகளையும் பயன்படுத்தி ஸ்ரீலங்கா இராணுவம் பல படுகொலைகளை புரிந்தது. இதற்கு கட்டளையிடுபவராக சந்திரிகா அம்மையாரே உள்ளார். எனவே இந்தக் கொலைகளுக்குப் பின்னால் உள்ள இலங்கை அரசினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்**

தமிழ்த் தேசிய இனத்திற்காக குரல் கொடுத்து வந்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டது ஊடகத்துறைக்கு மட்டுமல்ல தமிழ் இனத்திற்குப் பேரிழப்பாகும்.

தமிழீழ தேசியத் தலைமையின் அசைக்க முடியாத நம்பிக்கையையும், தமிழ்மக்கள் மீது அளவில்லாத பற்றும் உடையவரான ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டமை தமிழினத்தின் குரலை வேரோடு சாய்க்க எடுத்துள்ள முயற்சியாகும். இதனை தமிழினம் ஒரு போதும் சகித்துக் கொள்ளாது. ஊடகவியலாளர்களை கொல்வதன் மூலம் தமிழினத்தை அடிமைப்படுத்த முடியாது என்பதை துரோகிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

நாட்டின் உயர் பதவியான ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரால் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்த முடியாவிட்டால் விடுதலைப் புலிகளிடம் தன்னாட்சி அதிகார சபை என்னும் இடைக்கால நிர்வாக அலகைக கையளிக்கவேண்டும்.

புலிகள் இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்றால் சிறந்த நிர்வாகத்தை நடத்திக்காட்டுவர். தொடரும் கொலைகளை தடுப்பர் என்பதை உலகறியும் - நாடறியும் - இதனையே நாம் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம்.

**புதிய ஜனநாயகக் கட்சி**

கிழக்கு மாகாணத்தின் ஆற்றலும், துணிவும் மிக்க பத்திரிகையாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டமை, அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த கவலைக்கும் உரியதாகும். இக்கொலை, பத்திரிகையாளர் மீதான மற்றொரு காட்டு மிராண்டித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதனை ஆயுதம் ஏந்திய தரப்பினர் செய்தாலும் அத்தகையோரைப் புதிய ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அனைத்துப் பத்திரிகையாளர்களுடன இணைந்து நின்று எமது கட்சி துயர் பகிர்ந்து கொள்கின்றது. நடேசனின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

**பல்கலைக்கழக ஊழியர் சங்கம்**

தமிழ் ஊடகவியலாளர் ஜி.நடேசன அவர்களுடைய படுகொலைச் செய்தியைக் கேட்டு நாம் அதிர்ச்சியும், துயரமும் அடைந்தோம். கிழக்கிலங்கையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தொடரும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களினதும், கல்விமான்களினதும் கொலைகள் திட்டமிட்ட சதி வலைப்பின்னல் ஒன்றின் அடிப்படையில் நடத்தப்படுவதை எடுத்துக் காட்டுகின்றன.

கருணாவினதும், அவரது அடியாட்களினதும் முகமூடிகளைத் தரித்து சிறிலங்கா இராணுவம் தனது பேரினவாத படுகொலை வெறியாட்டத்தை மீள ஆரம்பித்துள்ளமையை இந்தச்சம்பவம் தெளிவாகக் காட்டுகின்றது. சந்திரிகா அரசு நியாயத்திற்கு குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்த இச்சம்பவத்திற்கான பொறுப்பை இராணுவமே ஏற்றுக் கொள்ளவேண்டும். அங்கு சட்டம், ஒழுஙகை அவர்களால் பேண முடியாவிட்டால் அப்பகுதியிலிருந்து அவர்கள் வெளியேறட்டும்.

**யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

கிழக்கு தமிழர் தேசியத்தின் பால் நின்று தமிழர் தேசியத்தை உள்ளூரிலும், உலகிற்கும் வெளிப்படுத்தி வந்த ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டமை அதிர்ச்சி தரும் செய்தியாகவே உள்ளது. கருணா எனற தனிநபரினால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடி நிலை தணிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கில் நிகழ்ந்து வரும் படுகொலைகளில் இறுதியாக ஜி.நடேசன் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இது பத்திரிகையாளர்களுக்கும், அவர்கள் பிரதிபலிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் விடுக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய சவாலும், அச்சுறுத்தலும் ஆகும். கருணாவினால் ஏற்படுத்தப்பட்ட நெருககடியைச் சாட்டாகக் கொண்டு தமிழ் இன எதிர்ப்புச் சக்திகள் மேற்கொள்ளும் இன ஒழிப்பு நடவடிக்கையே இது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஏனெனில், இதுவரை இடம்பெற்றுள்ள போராளிகள், பொதுமக்கள், கல்வியியலாளர், ஊடகவியலாளர் ஆகியோரின் படுகொலைகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரதும், பொலீஸாரினதும் பிரசன்னம் மிக்க இடங்களிலேயே இடம்பெற்றுள்ளன. கொலையாளிகள இராணுவ ரோந்துகள், காவலரண்கள், தடைமுகாம்கள் என்பவற்றுக் கூடாகவே வந்து படுகொலைகளை மேற்கொண்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இக்கொலைகளுக்குப் பின்னால் ஸ்ரீலங்கா இராணுவத்தினதும், அரசினதும் வலுவான கரங்கள் உண்டென்றே உணர்கின்றோம். இதுவரை இடம்பெறறுவிட்ட அத்தனை படுகொலைகளையும் கண்டும் கேட்டும் மௌனமாக இருக்கும் போர்நிறுத்தக் கண்காணிபபுக் குழுவின் நம்பகத்தன்மையும் கேள்விக்கு உள்ளாகி வருகின்றது.

கொலையாளிகளைக் கண்டுபிடிககாது இருப்பதன் மூலம் தமிழர்களுக்கு எதிரான சக்திகளின் பக்கம் அது சாயத தொடங்கியிருக்கின்றா? என்றே ஐயப்படவேண்டியுள்ளது.

சரியான முறையில் தனது கடமையை செய்யாது இருப்பின் தொடர்ந்தும் கண்காணிப் புக் குழு பணியில் ஈடுபடத்தான் வேண்டுமா என்பதே விசனம் தரும் கேள்வியாக உள்ளது.

**வன்னி மாவட்ட பத்திரிகையாளர் சங்கம்**

ஊடகவியலாளர் ஜி.நடேசன் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தையும் பாதுகாப்பற்ற உணர்வையும் இக்கொலைச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் போர்ச்சூழலில் நிலவியதொரு நிச்சமற்ற தன்மையையே தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கருத்து பேதங்கள் இருக்கலாம். அவற்றை வலியுறுத்துவதற்கும் பின்பற்றுவதற்கும் வன்முறைப் போக்கை கையாள்வது புத்திசாலித்தனம் அல்ல. இதற்காக சமூகத்தை வழி நடத்துபவர்களை கொன்றொழிப்பது மோசமான எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் குமாரவேலு தம்பையா கொலை செய்யப்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னர் தற்போது மூத்த பத்திரிகையாளர் ஜி.நடேசன் கொலை செய்யப்பட்டுள்ளார். இக் கொலையை வன்னிச் செய்தியாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மட்டக்களப்பு பகுதியில் சீர்குலைந்துள்ள சட்ட ஒழுங்குகளை சீர்செய்து பொதுமக்களினதும் புத்திஜீவிகளினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம், யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச்சங்கம், யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை, யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம், வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம், யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள், தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஆகியன உட்பட பல அமைப்புக்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.(எ-3)

## நடேசனின் இறுதிக்கிரியை நாளைமாலை நெல்லியடியில்

### பூதவுடல் இன்றுமுதல் மக்கள் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்

ஊடகவியலாளரும் நாட்டுப் பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் இறுதிக்கிரியைகள் நாளை மாலை நெல்லியடியில் இடம்பெறவுள்ளன.

அவரது பூதவுடல் தாங்கிய ஊர்திப்பவனி இன்றும் நாளையும் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் செல்லும்.

இன்று நண்பகல் ஒரு மணிக்கு முகமாலையை வந்தடையும் பூதவுடல் 'பாண்ட்' வாத்திய இசையுடன் கையேற்கப்படும். அந்த கையேற்பு நிகழ்வில் பெரும்எண்ணிக்கையானோா பங்கேற்பர்.

அங்கிருந்து புறப்படும் ஊர்தி 3 மணிக்கு கொடிகாமத்தை வந்தடையும். பின்னர் கொடிகாமம் பஸ் நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காகப் பூதவூடல் வைக்கப்படும்.

தொடர்ந்து ஏ-9 வீதியூடாகப் பிற்பகல் 4மணிக்கு பூதவுடல் தாங்கிய ஊர்தி சாவகச்சேரி பஸ்நிலையத்தை வந்தடைந்ததும் அங்கு மக்கள் அஞ்சலிக்காகப் பூதவுடல் வைக்கப்படும்.

அங்கு இருந்து புறப்படும் ஊர்திப பவனி மாலை 5மணியளவில் கைதடியை வந்தடையும். பின்னர் கைதடிச் சந்தியில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

ஊர்திப்பவனி மாலை 6மணிக்கு அரியாலையை வந்தடையும். அங்கு பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் மாலை 7மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரிவீதி ஊடாக தீவகத்துக்கு ஊர்திப்பவனி செல்லும். வேலணை, ஊர்காவற்றுறை பகுதிகளில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறும்.

நாளைகாலை 9மணிக்கு வீரசிங்கம் மண்டப முன்றலில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அங்கிருந்து மருதனார்மடம் செல்லும் ஊர்தி காங்கேசன்துறை வீதி வழியாக சுன்னாகம் சந்தையை 12 மணிக்கு வந்தடையும். அங்கு பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதன்பின் புத்தூர் வீதியூடாக அச்சுவேலிக்கு எடுத்துச் செல்லப்படும பூதவுடல் அங்கு அஞ்சலிக்கு வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து நெல்லியடிக்கு அவரது இல்லத்துக்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்படும். பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணிவரை மக்கள் அஞ்சலி செலுத்துவர்.

மாலை 4.00மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இறுதி வீர வணக்கக்கூட்டம் நடைபெறும்.

அதன் பின்னர் வடமராட்சி வதிரி, ஆலங்கட்டை மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

ஊர்திவரும் வழிகளில் வீதிகளில் மக்கள் கூடிநின்று மலர் அஞ்சலி செலுத்துமாறு ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (எ-3)

## சந்திரசேகரன் இன்று கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி,ஜூன்2

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் இன்று கிளிநொச்சி வருகின்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை முற்பல் 11மணிக்கு சந்திரசேகரன் சந்தித்து இன்றைய அரசியல் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சிக்கு வரும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுளளனர்.

இன்றுள்ள நிலையில் தமிழ்க்கூட்டமைப்பு எவ்விதத்தில் செயற்படவேணடும் என்பது குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவிருக்கிறது. (அ-3)

# ஈராக் அதிபர் சிக்கல் நேற்று நீங்கியது! புதிய அதிபராக யாவர் தெரிவானார்!!


பக்தாத்,ஜூன்2

ஈராக்கின் அதிபர் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் அமெரிக்காவுக்கும் ஈராக்கிய ஆளுநர் சபைக்கும் இடையே நிலவிவந்த சிக்கல்கள் முடிவுக்குவந்துள்ளன.

புதிய அதிபராக தற்போதைய ஆளுநர் சபையின் தலைவர் ஹாஸி யாவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று பின்னதாக வெளியிடப்பட இருந்தது. ஆளுநர் சபை உறுப்பினர் மொஹமட் ஒத்மன் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஈராக்கின் புதிய இடைக்கால அரசு ஹாஸி யாவர் தலைமையில் பதவியேற்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பச்சாச்சியை அதிபராக்க அமெரிக்கர்கள் விரும்பியபோதும் ஈராக்கிய ஆளுநர் சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சபையில் தலைவர் ஹாஸி யாவரையே அதிபராக்க விரும்பினார். இதனால், இழுபறிநிலை ஏற்பட்டது. நேற்று இரு தரப்புகளுக்கும் இடையில் மீண்டும் நடந்த பேச்சுகளைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும் ஆளுநர் சபைக்கும் இடையில் நிலவிவந்த மோதல் நிலை நீங்கியது.


புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹாஸி யாவர்.

முன்னதாக, அமெரிக்கர்கள் தங்கள் முடிவை ஈராக்கியர்கள் மீது துணிக்கப்பார்க்கிறார்கள் என்று ஈராக்கிய ஆளுநர் சபை உறுப்பினர்கள் சற்றம் தெரிவித்திருக்கின்றனர். அமெரிக்கா மீது அவர்கள் குற்றச்சாட்டுக்களை அடுக்கிவந்தனர்.

தற்போதைய ஈராக்கிய ஆளுநர் சபையின் தலைவராக இருக்கும் ஹாஸி யாவர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் விரும்பினார்கள். ஆனால், அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் இவரை விரும்பவில்லை.

அதற்குப் பதிலாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அட்ணன் பச்சாச்சி அதிபராக நியமிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கர்கள் விரும்பினர். இது ஆளுநர் சபையின் உறுப்பினர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. தங்கள் நாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் அமெரிக்காவின் அழுத்தம் தேவையற்றது என்று அவர்கள் கருதுகின்றனர். "நாங்கள் எங்கள் நாட்டு அதிபரைத்தான் தேர்ந்தெடுக்கின்றோம். அமெரிக்காவின் அதிபரை அல்ல" - என்றார் ஓர் உறுப்பினர்.

இந்த இழுபறிக்கு முடிவுகாணும் வகையில் நேற்று இரு தரப்பினரும் மீண்டும் கூடிப்பேசினர். ஏற்கனவே, பிரேரிக்கப்பட்டவர்களை விடுத்து புதியவர் ஒருவரை அதிபராகத் தெரிவு செய்வதில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் முயன்றனர் என்று செய்திகள் கூறுகின்றன.

நேற்று நண்பகலில் வந்த செய்தி ஒன்று யாவர் ஏற்றுக்கொண்டதையடுத்து பச்சாச்சி ஈராக்கிய அதிபராகிறார் என்று கூறியது. எனினும், சிறிது நேரம் கழித்து யாவரே ஈராக்கிய அதிபர் என்று செய்திகள் வெளியாகின.

எதிர்வரும் 30ஆம் திகதி ஈராக் நிர்வாகத்தை அதன் உள்ளூர் அரசிடம் அமெரிக்கா கையளிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. அதற்கு முன்னர் அங்கு இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதில் அது மும்முரமாக உள்ளது. ஏற்கனவே ஈராக்கின் பிரதமராக இயாத் அலவி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கின் அதிபர் பதவி என்பது அதிகாரமுள்ள ஒன்றல்ல. வெறும் அலங்காரத்திற்குரிய ஒன்று. என்றாலும், அதற்கு நியமிக்கப்படுபவர் தங்களின் விருப்பப்படியே நியமிக்கப்பட வேண்டும் என்று ஈராக்கிய ஆளுநர் சபை உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

இந்த விடயத்தில் ஐநாவும் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை என்று ஈராக்கியர்களுக்கு கோபம் உள்ளது. "அமெரிக்கர்கள் எல்லாவற்றையும் தங்கள் விருப்பப்படியே செய்வதற்கு முயல்கிறார்கள்" - என்று அவர்கள் கூறுகின்றனர். ஈராக்கில் இடைக்கால அரசு பதவியேற்ற பின்னர் எதிர்வரும் ஜனவரியில் நாடாளுமன்றத்துக்கான புதிய தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கிடையில், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பக்தாத்திலுள்ள கூட்டுப் படைகளின் மாகாண அலுவலகத்துக்கு நெருக்கமாகக் குண்டு வெடித்தது. இதில் நான்கு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

குவா என்ற இடத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்களுடன் இடம்பெற்ற மோதல்களில் இரு அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர். மோதல் நடந்த இடம் சர்ச்சைக்குரிய நஜாப் நகருக்கு வெளியே உள்ளது.

(க-10)

## கராச்சி மசூதியில் குண்டு வெடிப்பு 19 பேர் பலியாகினர்; பலர் காயம்!

இஸ்லாமாபாத்,ஜூன்2

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஷியா முஸ்லிம்களின் மசூதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 19 பேர் இறந்தனர்; ஏராளமானோர் காயமடைந்தனர்.

சுனி இன முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த அறிஞர் முப்தி நிசாமுதீன் ஷம்சாய் ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்ட பகுதியில்தான் இந்தக் குண்டுவெடிப்பும் நிகழ்ந்துள்ளது.

முப்தி கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மாலைவேளையில் பலர் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. இது தற்கொலைத் தாக்குதலாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் சிலரும் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார்கள்.

இந்தக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து நகரில் அவசர நிலையை அதிபர் முஷாரப் பிறப்பித்திருந்தார். அவர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அந்த நகரைக் கொண்டு வருவார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

(க-10)

## சதாமின் கைத்துப்பாக்கியைக் காட்டிப் பெருமையடையும் அமெரிக்க அதிபர்

நியூயோர்க்,ஜூன்2

ஈராக முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் கைத்துப்பாக்கி தற்போது அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் உள்ளது.

அதைக் குறிப்பிட்ட சில பார்வையாளர்கள் அல்லது விருந்தினர்களிடம் காட்டி மிகவும் பெருமைப்படுகிறார் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்.

இத்தகவலை 'ரைம்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் திக்ரித் அருகே பாதாள அறையில் பதுங்கியிருந்த சதாமை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் பிடித்தனர். அப்போது கைப்பற்றப்பட்ட சதாமின் உடைமைகளுள் அவரது கைத்துப்பாக்கியும் ஒன்று.

இத்துப்பாக்கியைக் கைப்பற்றிய வீரர்கள் குழு அதிபர் புஷ்ஷுக்கு அதனைத் தனிப்பட்ட அன்பளிப்பாக வழங்கியது.

இப்போது வெள்ளைமாளிகையின் முக்கிய பகுதியில் பெருமைக்குரிய பொருள்களில் ஒன்றாக சதாமின் துப்பாக்கியும் வைக்கப்பட்டுள்ளது.

புஷ்ஷுக்கு வேண்டப்பட்டவர் ஒருவர் வெள்ளை மாளிகைக்குச் சென்ற போது புஷ் அவரிடம் சதாமின் கைத்துப்பாக்கியைக் காட்டி மகிழ்ந்தாராம். அப்போது புஷ்ஷின் முகத்தில் பெருமை பொங்கியதாம். சதாமின் துப்பாக்கியை அவரது தனிப்பட்ட பரிசுப் பொருளாகவே புஷ் கருதுகிறாராம்.

சதாம் பிடிபட்டபோது அத்துப்பாக்கியில் தோட்டாக்கள் நிரப்பப்பட்டு இருந்தன என்று தகவல்கள் தெரிவித்தன. ஆனால் புஷ் சொல்வதோ வேறு.

"தோட்டாக்கள் இல்லாத துப்பாக்கிதான் அது. இப்போதும் தோட்டாக்கள் நிரப்பப்படாமல் தொடுவதற்கு ஏற்றவகையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது" - என்றார் அவர். (க-10)

## ராகுல் காந்தியை மணம் முடிக்கவுள்ள அந்த அதிர்ஷ்டசாலிப் பெண் யார்?

புதுடில்லி,ஜூன்2

சோனியா காந்தியின் மகன் ராகுல் காந்தியை மணக்க உலக அழகி ஐஸ்வர்யாராய் உட்பட 5 பெண்கள் போட்டியிடுகிறார்கள் என்று தமிழகத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ராஜீவ் - சோனியா தம்பதிகளின் மகன் ராகுல் காந்தி (வயது33) லண்டனில் படிப்பை முடித்து விட்டுச் சில காலம் அங்கு பணியாற்றிய பின்பு இந்தியா திரும்பிவந்தார்.

நடந்துமுடிந்த தேர்தலில் அமெதித் தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார்.

திருமண வயதைத் தாண்டி விட்ட நிலையில் இருக்கும் ராகுலின் வாழ்க்கையில் இனி அடுத்த முக்கியமான கட்டம் திருமணம்தான்.

நல்ல குடும்பத்தில் பிறந்து அழகும் கல்வி அறிவும் பெற்ற ராகுலை மணக்கப் பெண்கள் போட்டிபோட்டு வரிசையில் நிற்கின்றார்கள்.

அவர்களில் ஒருவர் 19 வயதுடைய கார்த்தினா. மொடல் அழகியும நடிகையுமான இவர் ராகுல் லண்டனில் வேலை பார்த்தபோது அங்கு இருந்தார். அப்போது இருவரும் சந்திப்பதற்காகன வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் சந்தித்தார்களா என்பது தெரியவில்லை.

கார்த்தினாவின் தந்தை காஷ்மீரையும் தாயார் இங்கிலாந்தையும் சேர்ந்தவர்கள். ராகுலின் மூதாதையரும் காஷ்மீரைச் சேர்ந்தவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த பெண் செலீனா. இவர் இந்திய அழகிப் பட்டம்பெற்றவர். காங்கிரஸில் சேர்ந்த இவர், பல கூட்டங்களில் ராகுலுடன் நேருக்கு நேர் விவாதம் நடத்தும் வாய்ப்புப் பெற்றவர் அந்தத் தொடர்பினால் இவரும் ராகுலின் மனைவியாகும் வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

3ஆவது இடத்தில் இருப்பவர் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா. இணையத் தளங்களில் வரும் இளம் அரசியல்வாதியான ராகுல் பற்றிய விவரங்களை ஐஸ்வர்யா ராய் ஆர்வமாகப் படிக்கிறார். அதேபோல் ஐஸ்வர்யா ராய் விளம்பரம் கொடுக்கும் குளிர்பானங்களைத்தான் ராகுல் விரும்பிக் குடிக்கிறார்.

அதேசமயம் ராகுல், ஐஸ்வர்யா ராய் இணைவதில் ஒருவில்லன் குறுக்கே நிற்கிறார். அவர்தான் நடிகர் விவேக் ஒபராய். ஐஸ்வர்யா ராயை அடைவதற்காக அவர் ஹிந்தி நடிகர் சல்மன் கானுடன் மோதியவர். ஆனால் விவேக் ஓபராய் ஒரு விபத்தில் சிக்கித் தற்போது ஓய்ந்து கிடப்பதால் ராகுலும் ஐஸ்வர்யாராயும் இணையத் தடையில்லை.

ராகுலை மணக்க 4ஆவது இடத்தில் இருப்பவர் கரீனா. இவரும் ராகுலும் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில ஒன்றாகப் படித்தவர்கள். அங்கே இருவரும் சந்தித்துக்கொண்டார்களா, கைகோத்து நடந்தார்களா, காதலித்தார்களா என்பது தெரியாது.

ஹிந்திப்பட உலகைச் சேர்ந்த கபூர் கன்னின் மகளான கரீனா காதலிக்க ஆள் ஒருவர் தேவை என்று தொலைக்காட்சியில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதுவும் ராகுலாக இருந்தால் நல்லது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியாவின் பெரிய அரசியல் குடும்பத்தின் வாரிசு தமது மருமகனாக வருவதை இந்தி சினிமா உலகின் முதல் குடும்பமான கபூர் குடும்பத்தினர் விரும்புகிறார்களாம்.

5ஆவது இடத்தில் இருப்பவர் ஜீவனிதா. ஆனால், உண்மையில் இவர்தான் முதலிடத்தில் இருக்கிறார். சில மாதங்களுக்கு முன் ராகுலுடன் இணைந்து இவரது பெயர் பலமாக வெளியானது.

சோனியா குடும்பம் கேரளாவில் உள்ள குமரகோம் மற்றும் லட்சதீவில் ஓய்வு எடுக்கச் சென்றபோது ராகுலுடன் ஜோடியாக இவரும் சென்றார். கொலம்பியாவை சேர்ந்த இந்தப் பெண்ணால் பெரும் சர்ச்சை கிளம்பியது.

மேற்கண்ட 5 பெண்களோடு மேலும் பலர் வரிசையில் நிற்கிறார்கள் அவர்களில் யாருக்கு ராகுல் மாலை சூடப்போகிறாரோ என்பதைக் காலம் தான் சொல்லவேண்டும். (க-10)

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு: குவைத்தில் மூவருக்குத் தூக்கு

குவைத்,ஜூன்2

குவைத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு மூன்று வயதுச் சிறுமி ஒருத்தியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சவூதி அரேபியாவைச் சேர்ந்த இரு சகோதரர்கள் உட்பட மூவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆம்னா என்ற மேற்படி சிறுமியை சவூதியர்கள் இருவரும் குவைத் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் சேர்ந்து கடத்திச் சென்று பாலைவனம் ஒன்றில் வைத்துப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் படுகொலை செய்தனர் என்று கூறப்பட்டது.

கடந்த 2 வருடங்களாக இவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவந்தன.


சிறுமியை வல்லுறவுக்கு உட்படுத்திய மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதைப் படத்தில் காணலாம்.

இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து மூவரும் நேற்று குவைத் உள்துறை அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக வைத்துத் தூக்கிலிடப்பட்டனர். (4)

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!
கடல்களிலும் சமுத்திரங்களிலும் காணப்படும் மாசுகளில்
எண்பது சதவீதமானவை நிலம் சார்ந்த செயற்பாடுகளினாலேயே உண்டாகின்றன.

## யாழ்.மத்திய கல்லூரி

### பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்-2004

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 20-06-2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் V.T.**சிவலிங்கம்** அவர்கள் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

1) இரண்டு நிமிட மௌனம்.
2) தலைமை உரை.
3) போசகர் உரை.
4) சென்ற பொதுக்கூட்ட அறிக்கை.
5) செயற்பாட்டறிக்கை - செயலாளர்.
6) I பொருளாளர் கணக்கறிக்கை
II 2001, 2002, 2003 ஆண்டு காலப்பகுதி கணக்கு விவரம்.
7) பிரேரணைகள் (இருப்பின்).
8) உத்தியோகத்தர் தெரிவு.
9) இதர விடயங்கள்.

குறிப்பு:-

I) பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 14.06.2004 இற்கு முன்பாக செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

II) 2001, 2002, 2003 ஆண்டு காலப்பகுதிக்கு திருப்திகரமான கணக்கறிக்கை முன்னைய தலைவரால் சமர்ப்பிக்கப்படாததால் இது சம்பந்தமான இறுதி நடவடிக்கைக்கு உறுப்பினர்களின் அபிப்பிராயம் பெறுதல்.

57, அம்மன் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

என்.இராஜதேவன்
செயலாளர்,
(32651)(12-33-38) பழைய மாணவர் சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
20 - 11 - 1948



இறைவன் நிழலில்
03 - 05 - 2004

### வலத்தீஸ் பாக்கியநாதன்

(ஓய்வுபெற்ற ஊழியர், K.K.S. சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

ஆலமரம் போல் நீயிருந்தாய் -அதில்
ஆறிடும் உயிர்களாய் நாமிருந்தோம்
பேசிட வார்த்தையின்றி நீ மறைந்தாய் - நாம்
தேறிட முடியாமல் கதறுகிறோம்.

எம் அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவினால் ஆற்றொணா துயருற்றிருந்த வேளையில் எமக்கு ஆறுதல் கூறி, உதவிகள் பல புரிந்த அனைத்து நேச உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

01.06.2004 செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை புனித அந்தோனியார் கோயிலில் நடைபெற்ற திருப்பலி பூசையைத் தொடர்ந்து 02.06.2004 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி: பா.சீவரத்தினம்
மகள்: பா.செல்வஅமுதினி
குடும்பத்தினர்.

(32632)(12-33-38-35)

## திருமண வாழ்த்து

இன்று 2004-06-02 ஆம் திகதி புதன்கிழமை திருமண பந்தத்தில் இணையும் **மணிவர்ணன்-சோபினி** தம்பதிகளைப் பதினாறு பேறுகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தனம் டிஜிற்றல் வீடியோ குடும்பம்,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
Cell-0777-6315770

(32473)(12-33-38-35)

## 20 ஆம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி பொன்னுத்துரை பத்மலோஜினி

மலர்வு
20-08-1940

உதிர்வு
13-06-1984



இருபது ஆண்டுகள் இன்றுடன் ஓடினாலும்
இருள் நீக்கி ஒளிகாட்டும் தாயாக
உள்ளங்களில் என்றும் நிறைந்திருப்பதனால்
நீ இல்லை என்ற துயர் இருக்கவில்லை அம்மா!


பத்மலோஜினி பவனம்.
பத்திரகாளி கோயிலடி.
சுழிபுரம்.

நின் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.

(32633)(12-33-38-42)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அவதாரம்
20 - 11 - 1948



அமரத்துவம்
03 - 05 - 2004

வசாவிளான் தோலகட்டியைப் பிறப்பிடமாகவும் வராத்துப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வலத்தீஸ் பாக்கியநாதன் (சித்தப்பா)

(ஊழியர், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

குடும்ப உயர்வுக்கு உழைத்த தலைவனாக
சமூகப் பணிகளில் தோள்கொடுக்கும் தோழனாக
பண்பாளனாக நல்லதொரு நண்பனாக வாழ்ந்து
நெஞ்சமதில் நிலைபெற்ற அப்பாவே! சின்னமாமாவே!!
இறையடியில் நின் ஆத்மா இளைப்பாற வேண்டுகின்றோம்.

வராத்துப்பளை,
பருத்தித்துறை.

அமுதா - மகள்,
மருமகன், உறவினர்கள்.

(32650)(12-33-38-42)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று, சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்(10-ரி)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூன்2

மாதகல், அரசடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது. நாளை வியாழக்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெறும் (4-90-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்2

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மணவாளக்கோலத் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 9மணிமுதல் சங்காபிஷேக கிரியைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இரவு 7மணிக்கு இடம்பெறும் விசேட சொற்பொழிவில் 'விநாயக மகத்துவம்' என்ற தலைப்பில் விகடகவி மு.திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவார். (10-5)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூன்2

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலிப் பூசையும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன. (4-135)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூன்2

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை காட்டுத்துறையூர் அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்மாகித் தொடர்ந்து 10நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்(10-ரி-152)

★ ★ ★

கம்பளை,ஜூன்2

கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மஹா சங்காபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

கிரியைகள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றன. (10-ரி)

## செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்ட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 10மணிக்கு பேரவையின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் யாழ். கல்விவலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(4-7)

## மக்கள் வங்கிக்கிளை சனிக்கிழமையும் திறந்திருக்கும்

தென்மராட்சி,ஜூன்2

மக்கள்வங்கியின் சாவகச்சேரிக் கிளை இனிமேல் பிரதி சனிக்கிழமைகளிலும் வங்கி நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்குமென முகாமையாளர் க.சிவபாலன் தெரிவித்துள்ளார். (4-117)

## மோ.சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்2

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சங்கத்தானை வீதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சசிகரன் (வயது - 21), திருகோணமலையைச் சேர்ந்த யோகராஜா பிரசாந் (வயது 21), சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த செல்லையா சுபாரத்தினம் (வயது - 64) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (4-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அன்னையின் மடியில
20.08.1970

ஆண்டவன் அடியில்
03.05.2004

### அமரர் தில்லைநாதன் கெங்காதரன்

(உரிமையாளர்- தரன் மரக்காலை, கொக்குவில்).

அன்னைக்கு முதல்மணியாகி அன்பின் ஒளிவிளக்காய் ஒளிர்ந்த
எம்குலத்தின் முதல்க்குருத்தே ஆறவில்லை எம்மனம்-மாதம்
ஒன்றானாலும் ஏழ்பிறப்பும் உம்பிரிவு தொடர்ந்து எமை வாட்டுமையா!

இன்று (02.06.2004) புதன்கிழமை கீரிமலையில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியையிலும் எதிர்வரும் (04.06.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மில் ஒழுங்கை.
மல்லாகம்.

(32651)(12-33-38)

-குடும்பத்தினர்.

**உதயன்**

## தர்மத்தின் வாழ்வை கவ்விய சூது!

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கான வேள்வியில் ஆகுதியாக மற்றொரு பத்திரிகையாளன் வீழ்த்தப்பட்டிருக்கிறான்.

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளத் திராணியற்றவர்களின் கருத்திலே, ஓர் இனத்தின் தேசிய விடுதலைக்கான ஒரு சித்தாந்தவாதியின் சிந்தனை அழித்தொழிக்கப்பட்டுவிட்டது; சுதந்திர எண்ணக்கருக்களைப் பிரதிபலித்த ஒரு சுயாதீனப் பேனாவின் கூர்முனை மழுங்கடிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், முழுமையான உண்மை அதுவல்ல.

அடக்கப்பட, அடக்கப்பட மேன்மேலும் உத்வேகத்தோடு பீறிட்டு எழுகின்ற பத்திரிகையாளர்களின் சுதந்திர சிந்தனைக்கு இந்த நாட்டுப்பற்றாளனின் வீழ்ச்சி ஒரு வகையில் உரமூட்டும் எழுச்சி. சித்திக்கு - வெற்றிக்கு - வழிகாட்டும் வித்தாகியிருக்கின்றான் இந்தப் பத்திரிகையாளன்.

யுத்தம் மலிந்த பூமியிலே நித்தம் மரணம் என்ற அச்சுறுத்தலை எதிர்கொண்டபடியேதான் தங்கள் வரலாற்றுப் பணியைப் பத்திரிகையாளர்கள் ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

தங்கள் பணியின் ஆபத்தைப் புரிந்துகொண்டுதான் அந்தப் புனிதக் கடமையிலே ஊடகவியலாளர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஓர் இனத்தின் விடுதலைக்கான எழுச்சியிலே - சரித்திரத்தின் மிக முக்கியமான காலகட்டத்திலே - ஊடகவியலாளனின் கடமை வரலாற்றுப் பணியாகின்றது.

அந்தப் பணியைத் துணிச்சலோடு முன்னெடுக்க முன்வந்த ஒருசிலருள் ஐயாத்துரை நடேசன் முக்கியமானவர்.

எண்பதுகளின் பிற்பகுதியிலே தெற்கிலே ஜே.வி.பி. கிளர்ச்சி ஆயுத வன்முறையாக வெடித்தது. வடக்கு - கிழக்கில் பீறிட்ட புரட்சிபோல - பெரும் யுத்தமாக - அது உருவெடுக்காவிட்டாலும், ஆங்காங்கே வன்செயல்கள் கட்டுக்கடங்காமல் நிகழ்ந்தன. இன்று தென்னிலங்கையிலே பெரும் பத்திரிகையாளர்களாக - ஊடகவியலாளர்களாக - தங்களை இனங்காட்டிப் பீற்றிக்கொள்ளும் முக்கிய புள்ளிகள் எல்லாம் அன்று தெற்கின் சூடான நிலையை எதிர்கொள்ளத் திராணியற்றவர்களாக நாட்டைவிட்டே ஓடினார்கள். மக்களோடும், மண்ணோடும் தம் தாயகத்தோடும் நின்றுபிடிக்காத அவர்கள் வேறு நாடுகளில் ஒளிந்திருந்து கொண்டு கொழும்பு ஊடகங்கள் வாயிலாகத் தங்களை - தங்கள் குரலை - தங்கள் எழுத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆக, ரிச்சர்ட் டி சொய்ஸா போன்ற ஓரிருவரைத் தவிர மற்றெல்லோருமே இப்படித்தான் ஒளித்துப்பிடித்து விளையாடினார்கள்.

ஆனால், ஈழத்தமிழ்ப் பத்திரிகையாளர்கள் அகோர யுத்தம் வெடித்த காலத்தில் கூட - உச்ச உயிராபத்தும் தாங்கொணா நெருக்கடிகளும் எழுந்தவேளையில் கூட - தமது மக்களையும் மண்ணையும் தாயகத்தையும் விட்டு ஓடாமல், கிடைத்த வழிகள் மூலம் தமது மண்ணின் உண்மை நிலையை உலகுக்குப் பறைசாற்றிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு துணிச்சலோடு நின்ற ஊடகவியலாளர்கள் வரிசையில் நிமலராஜன், நடேசன் போன்றோருக்கு முன்னணி இடம் உண்டு.

இந்த யுத்த காலத்திலே ஈழத்தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு எதிராக எத்தனை [illegible]தல்கள், எத்தனை கைதுகள், எத்தனை மி[illegible] எத்தனை குண்டு வீச்சுக்கள்.....! - இப்பட்டியல் [illegible]ன்டது.

ஆனால், குடாநாட்டிலும், வன்னியிலும், கிழக்கிலும், தலைநகர் கொழும்பிலும் துப்பாக்கி முனைக்கு எதிராக வலுமிக்க பேனாவால் மோதும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் இந்த அச்சுறுத்தல்களுக்குக் கிஞ்சித்தும் அஞ்சவில்லை; அஞ்சமாட்டார்கள்.

பேனா முனையைத் துப்பாக்கியால் அடக்க முனையும் - முயலும் - சக்திகள் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்.

தேசியத்துக்கான பெரும் எழுச்சிப் போக்கில் முழு இனமுமே தன்னை முற்றாக இணைத்துக்கொண்டுள்ள இவ்வேளையில், இத்தகைய படுகொலைகள் மூலம் பத்திரிகையாளர்களின் பேனா முனையை முறித்துவிட முயல்பவர்கள் தோல்வியைத்தான் தழுவுவார்கள்.

ஏனெனில், ஒரு பத்திரிகையாளனைக் கொல்வதன் மூலம் ஓரினத்தின் சிந்தனை வெடிப்பை - புரட்சி எழுச்சியை - மூடிவிட முடியாது; மாறாக, அவனின் சிந்தனை பல கூர்முனைப் பேனாக்களாக உருவெடுக்கும். அதுதான் யதார்த்தம்.

'முரசொலி' பத்திரிகை ஆசிரியருக்கு இலக்கு வைத்து அவர் தப்ப, அதற்காக அவரது ஒரே மகனைக் கொன்ற அரசியல் சக்திகள் இன்று ஓடி ஒளித்த இடம் எது? ஊடகவியலாளன் நிமலராஜனைக் கொன்றவர்களுக்கு மக்கள் கொடுத்த பரிசு என்ன? அதே தீர்ப்புத்தான் நமது நண்பன் நடேசனைக் கொன்றவர்களுக்கும் என்பது தவிர்க்கப்படமுடியாதது.

மக்களைச் சந்திக்க முடியாத பிற்போக்கு சக்திகள் - உண்மைக் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாத இன, தேச விரோதிகள் - கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெருக்குவதன் மூலம் - நொறுக்குவதன் மூலம் - தங்களின் எதேச்சாதிகாரத்தை நிலைநாட்டி விடலாம் என்று வெறும் கற்பனை செய்கின்றன.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். ஆனால், தர்மம் என்றோ ஒருநாள் வெல்லும்' என்ற வாக்கியப்படி சூது கவ்வியுள்ளது. தர்மம் வெல்லும் போது இந்தச் சூத்திரதாரிகள் அம்பலமாவார்கள். இது நிச்சயம், நியதியும் அதுவே.

# நிலம்காக்கும் நிறைவான கல்விக்கு ஓரணியில் நின்று குரல்கொடுப்போம்

### தமிழ் மாணவர் ஒன்றியம் அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஜூன்2

ஒருமித்த சக்தியாக ஓரணியில் திரண்டு நின்று நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்திருக்கிறது யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்.

எதிர்வரும் 6ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பாகத் தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுதந்திர காலந்தொட்டே தமிழினத்துக்கு விரோதமாகப் பல்வேறு சதி வலைகளை விரித்து அவற்றுள் தமிழரின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் நசுக்கப் பேரினவாதிகள் முயன்று வந்திருப்பதனை எமது இனத்தின் கடந்தகால வரலாறுகளில் இருந்து அறியமுடிகின்றது.

அதன் ஓர் அங்கமாக எழுதுபதுகளின் நடுப்பகுதியில் பேரினவாதத்தின் இனத்துவேசத்தினால் தமிழ் மாணவர்களுடைய கல்வியைச் சீரழிக்கும் வகையில் திட்டமிட்ட முறையில் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறையினைக் குறிப்பிடலாம்.

இதன்மூலம், எமது மாணவர்களின் எதிர்காலத்தினை நடுத்தெருவுக்குக் கொண்டுவருவதற்காக சிங்கள தேசம் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வந்தது.

இதன் விளைவாக, பாடசாலைகளில் கற்கவேண்டிய தமிழ் மாணவர்கள் யுத்த பீடத்தில் களக்கற்கை நெறிகளை கற்கத் தொடங்கினர்.

இவ்வாறு எழுச்சிகொண்ட ஆயிரமாயிரம் மாணவர்கள் மத்தியில் தன்னை ஓர் இலட்சியவாதியாக்கிய சிவகுமாரன் தன் தாயக மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் பகைவரைத் தேடித்தேடி அழித்தான்.

ஆயிரமாயிரம் இளைஞரைத் திரட்டி பேரினவாதத்திற்கெதிராகக் குரல் கொடுத்தான். அந்த இலட்சியப் பாதையிலே சென்றுகொண்டிருந்த நாளில்தான் தமிழினத் துரோகிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டு 23 வயதிலே விடுதலைக்காக விதைக்கப்பட்ட முதல் வித்தாகினான்.

தன் குறுகிய காலப் போராட்ட வரலாற்றிலே பல சாதனைகளைப் படைத்த அண்ணன் சிவகுமாரன், விடுதலைக்காக விதைக்கப்பட்ட அந்தப் புனித நாள்தான் தமிழீழ மாணவர் எழுச்சிநாளாகத் தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மாணவர்களின் கல்வியினைச் சீர்குலைப்பதற்காகத் தமிழ்ப் பாடசாலைகளைக் காவலரணாக்கிக்கொண்டது மட்டுமல்லாமல், எமது மாணவர்களின் பாதுகாப்புக்குத் தாமே காரணம் என சிங்களக் கூலிப்படை கூறிவருவது நகைப்புக்கிடமானதாகும்.

அந்த வகையிலே, சீரழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற எமது கல்விச் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காகவும், கயவர்களின் பிடியில் காவலரண்களாக விளங்கும் எமது பாடசாலைகளை மீட்டெடுப்பதற்காகவும் ஒருமித்த சக்தியாக ஓரணியில் திரண்டு நின்று நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# விபத்தில் சிக்கும் வாகனங்களை சேதப்படுத்துவதைத் தவிருங்கள்

### மனிதநேய அமைப்புக்கள் பொதுமக்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

விபத்துக்களில் சம்பந்தப்படும் வாகனங்களைச் சேதப்படுத்துகின்ற அல்லது அழிக்கின்ற நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஈடுபடுவதனைத் தவிர்க்கவேண்டும்.

இலங்கை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் யாழ். மாவட்டக்கிளை இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் யாழ். கிளை உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலிலே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக விபத்துக்கள்மூலம் உயிர்ச்சேதம் ஏற்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. இச்செயற்பாடானது மக்களுக்கு ஆத்திரமூட்டுவனவாக அமைந்தாலும் அவர்கள் சட்டத்தினைத் தமது கைகளில் தூக்கி எடுத்துச்செயற்படுவது மிகவும் வருத்தத்திற்குரியது.

எனவே, மக்கள் அவ்வாறு செயற்படுவதனைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் இக்கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முக்கியமான சில தீர்மானங்கள் வருமாறு:-

★ விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக வாகன வேகக் கட்டுப்பாடு தொடர்பாகத் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்துடன் கலந்துரையாடுதல், போக்குவரத்துக்குத் தகுதியான வாகனங்களைப் பொருத்தமான அதிகாரிமூலம் பதிவுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

★ சட்டம் தொடர்பாகவும், சிறுபான்மையினரின் உரிமைகள தொடர்பாகவும் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல், ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் மனித உரிமைகள் தொடர்பான கண்காட்சிகளை நடத்துதல். (4-5-ரி)

# உலக வங்கியின் உதவியுடன் தென்மராட்சியில் வீடமைப்பு

தென்மராட்சி, ஜூன்2

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் தலா ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டிருப்பதாகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக மறவன்புலோ, கோவிலாக்கண்டி, கைதடி கிழக்கு ஆகிய பகுதிகளில் 25வீடுகளும், மட்டுவில் மத்திப் பிரதேசத்தில் 25வீடுகளும் அமைக்கப்படவிருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக பல அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்குத் தற்காலிக வசிப்பிடக கொட்டில்களை அமைத்துக் கொடுத்தனர்.

இவ்வீடுகளில் வசதியாக வாழமுடியாதபோதிலும் மீளக் குடியமர்ந்த வேளையில் அந்த வீடு ஒரு நிவாரணமாக இருந்தது.

ஆனால், குறைந்த செலவில் அதாவது, 65ஆயிரம், 75 ஆயிரம் ரூபா செலவில் வீடுகளை அமைத்துக்கொடுக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் பல மக்களிடம் கையெழுத்துப் பெற முயற்சிப்பதாக அறிகிறோம். எனவே, மக்கள் அவசரப்படாமல் பொறுமை கடைப்பிடித்தால் அடிப்படை வசதிகளுடன் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதேசத்தின் அழிந்த வீடுகளை மீள நிர்மாணிப்பதற்குத் தேவையான தரவுகள் திரட்டப்பட்டுவருவதால் ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு நல்ல எதிர்காலத்தை இந்தப் பிரதேசம் காணவுள்ளதெனத் தெரிவித்தார். (4-117-170)

## வளிமண்டலத் திணைக்களத்தின் நிபுணர்கள் குழு யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்2

வளிமண்டலவியல் திணைக்களத் தலைமையகத்திலிருந்து ஐந்து பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகைதரும் இக்குழுவினர் அன்று காலை 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் 'பொதுமக்கள் இயற்கை அனர்த்தங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எபபடி?' என்ற தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கிற்கு வளிமண்டலத் திணைக்களத்தின் பணிப்பாளர் அபயசிங்க தலைமை வகிப்பார்.

யாழ். அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், யாழ். திருநெல்வேலி ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

திருநெல்வேலியிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்கும் செல்லவுள்ள இவர்கள், அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

**நாளை**

வைகாசி 21
வியாழக்கிழமை
(03.06.2004)
திதி : பூரணை
பகல் 10.15 வரை
நட்சத்திரம்: அனுசம்
காலை 6.25 வரை
சுபநேரம்: 7.22 - 8.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

... இல்லற வாழ்க்கையை வெற்றிகரமானதாக்க இருவர் தேவை. தோல்வியாக்க ஒருவர் போதும்....

## மதுவரித் திணைக்களத்தில் நிலவும் குறைகளைத் தீர்க்க அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். மாவட்டத்திலுள்ள மதுவரித் திணைக்களங்களத்தில் உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உறுதியளித்துள்ளார் என்று மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி என்.சோதிநாதன் தெரிவித்தார்.

2003, 2004ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் நாடு பூராகவும் திறமையாகச் செயற்பட்ட மதுவரி உத்தியோகத்தர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி கண்டி திகண விலேஜில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நிதி அமைச்சர் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான விருதுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

பங்குபற்றிய வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் வட பகுதியில் உள்ள மதுவரித் திணைக்கக் கிளைகளில் ஆளணி மற்றும் வாகனங்கள் என்பவற்றிற்கான பற்றாக்குறை அதிகளவாகக் காணப்படுகின்றன எனவும் -

இவற்றின் காரணமாக மது வரித்திணைக்களத்தின் செயற்பாடுகளைச் சீராக மேற்கொள்ளமுடியாமல் இருப்பதால் அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்தே இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக நிதியமைச்சர் தெரிவித்தார் என்று சோதிநாதன் மேலும் தெரிவித்தார். (5)

# சித்தன்கேணி பெரியவளவு
# ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில்
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 02.06.2004

## நாற்சந்தி நாயகனின் ரதோற்சவ ஆசிச் செய்தி



ஓங்ஹார ரூபமாய் உலகெங்கிலும் வியாபித்து அடியார்கள் தம்வினை தீர்க்கும் சித்தன்கேணி ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் இன்று சிங்காரத் தேர் ஏறிவந்து ஆன்மாக்கள் மீதுள்ள மும்மலங்களை நீக்கி, ஷாம்பவ தீஷை எனும் தீஷையாலே இப்பூவுலகத்து சகல ஜீவராசிகளினதும் ஆன்மாக்களைத் தூய்மைப்படுத்தி ரட்சித்தருள் பாலிக்கிறார்.

நால் வேதமும் தேரின் சக்கரங்களாகும். வாசுகிப் பாம்பு அதன் வடமாகவும், நான்முகன் தேரின் சாரதியாகவும் இருக்கத் தேவர்கள் குழாமாக வந்து வடம் பிடித்து, எம்பெருமான் ஞானவிநாயகனின் ரதோற்சவத்தில் கலந்துகொண்டு தமக்கும், இப்பூவுல ஜீவராசிகளுக்கும் ஞானத்தினைத் தருமாறு வேண்டி நிற்க ஞானஸ்வருபனான எம்பெருமானும் அவ்வண்ணமே தமது நல்லருளை வாரி வழங்கவேண்டும் எனப் பெருமான் முன் இருகரங்கூப்பிப் பணிவுடன் பாதார விந்தங்களில் வணங்கி நல்லாசி கூறி அமர்கிறேன்.


இறைபணியுள்ள
சிவாசார்ய சிரோன்மணி
**லம்போதர குமாரசாமிக் குருக்கள்.**







''வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்''
"வெள்ளைக் கோம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே"
"நம்பிக்கையோடு நும்பிக்கையானைத் தொழுதால்
வினைகளெல்லாம் வேரறுந்திடுமே"
"அப்பமுப்பழம் அமுது செய்தருளிய தொப்பையப்பனைத்
தொழ வினையறுமே"



### தேரேறி வருகின்ற தேவாதிதேவனே! விக்கினம் போக்கும் விநாயகப் பெருமானே!

விக்கினம் போக்கிடும் விநாயகப் பெருமானே
வினைகள் தீர்த்திடும் விக்னேஸ்வர மூர்த்தியே
பக்குவமாயுந்தன் பாதபங்கயம் பணிந்தோம்
பாவங்கள் போக்கியே காத்தருளவேண்டும்
நெக்குருகி நின்றே நித்தமும் வலம் வந்தோம்
சித்தன்கேணியுறை சித்தி விநாயகனே சரணம்
சுக்குநூறாகவே எம் கர்மவினை போக்கிடும்
விக்ன விநாயகனே நின்தாழ் சரணம்! சரணம்!!
சித்தன்கேணிப் பதியில் நித்தமும் உறைந்திடும்
முத்துவிநாயகனே மூத்தவனே கணேசா!
வித்தகப் பிள்ளையாரே வினைகள் தீர்ப்பவனே
தேரேறி வருகின்ற தேவாதிதேவனே !
நித்தமுந்தன் கோயில் காலால் வலம் வந்தோம்
நின்மல மூர்த்தியே நீ பரம பதம் அருள்வாய்
சுத்தத்திருநீறு நெற்றியில் துலங்கிட வந்து
பத்மபதம் பணிந்தோம் கணபதியே சரணம்!
- கணபதி கழல் பணிவோன் -

(சி-35347) (24-12)


**கஜராம்ஸ்**
**தொலைத்தொடர்பு நிலையம்**
சித்தன்கேணி.
T.P.No. 060 2213155

**சுப்றா (14)**
**சித்தன்கேணி.**

**COMPCARE COMPUTER**
**ACADEMY**
சித்தன்கேணி.

**நிறைஞ்சனாஸ் இரும்பகம்**
பிரதான வீதி,
சங்கானை.


### திருமணத் தம்பதிகளை வாழ்த்துகின்றோம்

இன்று (02-06-2004) புதன்கிழமை இல்லறத்தில்
இணையும் புதுமணத் தம்பதிகளான

**வர்ணன் - சோபி**

தம்பதிகளை நெடிது இன்புற வாழ
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

"செல்லமுத்தூஸ்",
நெல்லியடி.

சண்முகசுந்தரம்
குடும்பத்தினர்.

(C/35357)(42-12-24)


ஓம்
சிவமயம்

### திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசித் திங்கள்
20ஆம் நாள் இன்று (02-06-2004) புதன்கிழமை
காலை 9.45 மணி தொடக்கம் 11.31 மணிவரையுள்ள கடகலக்கின
சுபமுகூர்த்த சுபவேளையில்,

**திரு.திருமதி செல்வராசா**
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**மணிவர்ணன் (வர்ணன்)**
(வாணி ரெக்ஸ்)
அவர்களுக்கும்



**திரு.திருமதி இரத்தினசபாபதி**
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சோபினி (சோபி)**
(ஆசிரியை)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்:

திரு.திருமதி செல்வராசா,
(வாணி ரெக்ஸ்)
மணிமாளிகை,
கென்ஸ்மன் வீதி,
சாவகச்சேரி.
தொ.பேசி: 060-2213117
077-6164567

திரு.திருமதி இரத்தினசபாபதி,
அன்னை இல்லம்,
சிங்கராஜா வீதி, கல்வியங்காடு,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2213117
077-6258256

(இரு வீட்டார் அழைப்பு)

(C/35357)(42-12-24)

### அறக்கொடை வைபவம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருதுக்கான அறக்கொடை வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூரில் உள்ள அகில இலங்கை கம்பன் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-ரி)

### பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம்,ஜூன்2

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெற்றோர்தின விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலயத்திலுள்ள பொன்னுத்துரை அரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் அதிபர் சுயோகராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முதன்மை விருந்தினர்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனும், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சரோஜினி வேதநாயகமும், கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்துகொள்ளவுள்ளனர். (4-ரி)

### பாம்பு தீண்டிய சிறுமி மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்2


இரவுப் படுக்கையில் பாம்பு தீண்டி 10 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

மந்துவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணேசமூர்த்தி றஜிதா (வயது 10) என்ற சிறுமியே மரணமானவராவார்.

இரவு 11மணிக்குப் பாம்பு தீண்டியிருந்தும் இரவு அதன் தாக்கம் தெரியாத நிலையில் மீண்டும் நித்திரைக்குப் போனதாகவும் அதிகாலை எழுந்தபோது சிறுமி மயக்கமடைந்திருப்பதையடுத்து நேற்றுமுன்தினம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்து அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய சில நிமிட நேரத்தில் அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (10-15)

### 45ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வன் து.சாருசன்

(மாணவன், யாழ். இந்துக் கல்லூரி)

மலர்வு
07-11-1987

உதிர்வு
19-04-2004

நாலு வார்த்தைகள் உன்னோடு நாம் பேச
எம்மருகில் நீ வேண்டும் சாருசா!
கள்ளங்கபடமில்லா உன்முகச் சிரிப்பும்
நெஞ்சிலே வஞ்சமில்லா உன் அகச் சிரிப்பும்
மூத்தோர்க்கு அடிபணியும் உன்னதப் பண்பும்
எம் நினைவிலிருந்து என்றும் நீங்காது
பந்து எடுத்து துடுப்பு எடுத்து - எம்மோடு
அன்று நீ விளையாடினாய் - ஆனால்
இன்று அந்தக் கண்ணில்லா காலனவன்
ஏன் தான் பாதியிலே பறித்து எடுத்தான்?
அடுத்தொரு பிறப்பொன்று உன்னோடு எமக்கிருந்தால்
நிச்சயம் சந்திப்போம்! அதுவரை உன்
ஆத்மா உளவிக்குளத்தான் கரையில் துயிலட்டும்.

இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது தவித்த
உன் உடன்பிறவா அண்ணன்மார்களான:
**பிரபு, கேதீஸ், முரளி, றமணன்**
**அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழகம்,**
**கனடா.**

(32644)(42-12-24)

உ
சிவமயம்



*மணித்தீபமெனும் நயின தீவுநனி*
*வாழியதில் மகிழ்ந்து கோயில்*
*பிணிப்பிறவியறுப்பதற்காக கொண்டுயரும்*
*அரவணிந்த பெரியாள் வாழி*
*கணித்திதுவே பேரறமென் றன்னதானம்*
*செய்யும் கருத்தோர் வாழி*
*அணித்தெனவே யார்க்கு மனம் தரும் அமுத*
*சுரபியில்லம் அலர்ந்து வாழி*

- அறிஞர் கி.வா.ஜகந்நாதன்
கலைமகள்,
தமிழ்நாடு - இந்தியா - 1972.

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி
# அமுதசுரபி அன்னதான சபை
## பதிவு இல. S.236

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை 'அமுதசுரபி' என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்துவருகின்றது. இந்த ஆண்டுடன் 45ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதித் தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமககள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவிசெய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியனவற்றை மனமுவந்து உதவிவரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*★ இவ்வாண்டு ஆனி மாதம் 4ஆம் நாள் (18-06-2004) வெள்ளிக்கிழமை அம்பிகையின் உயர்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி 17ஆம் நாள் (01.07.2004) தேர்த்திருவிழாவும், ஆனி மாதம் 18ஆம் நாள் (02.07.2004) தீர்த்தத் திருவிழாவும், ஆனி மாதம் 19ஆம் நாள் (03.07.2004) தெப்பத் திருவிழாவும் நடைபெற இருப்பதால் அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்தமுறையில் 16 நாள்களும் அன்னதானம் வழங்க எமது சபை தீர்மானித்துள்ளது. எனவே, தருமசீலர்களாகிய உங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற உத்தமத் தொண்டர்கள் 01-06-2004 முதல் 15-06-2004 வரை வருவார்கள். அவர்களிடம் வழமைபோல நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றை வழங்கிச் சபையின் பற்றுச்சீட்டைத் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*★ அம்பிகையின் ஆலயத்தில் இருந்து தெற்குப் புறமாகச் செல்லும் நெடுஞ்சாலையில் 100 மீற்றர் தொலைவில் அமுதசுரபி அன்னதான சபை மண்டபம் அமைந்துள்ளது. அடியார்கள் அனைவரையும் அங்கு வருகைதந்து அன்னதானத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

பணிவுடன்
**கு.சாந்தலிங்கம்**
கௌரவ செயலாளர்,
அமுதசுரபி மண்டபம்,
நயினாதீவு - 02

(சி-35354) (26-14-38)


## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்2

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் 44ஆவது ஆண்டு விழா இன்று பிற்பகல் 2மணிக்கு க.சண்முகலிங்கம் தலைமையில் நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. (-10-ரி)

## வேலையற்ற பட்டதாரிகளை ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை

தென்மராட்சி,ஜூன்2

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் ஆட்சேர்ப்பதற்கென விண்ணபித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர் முகப்பரீட்சை எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் பிரதேச செயலகத்தில் நடைபெறும். விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான கடிதங்கள் தனித் தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (-4-117)

## பரிசளிப்பும் நூல் வெளியீடும்

வலி.தென்மேற்கு,ஜூன்2

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் அண்மையில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 5மணிக்கு மாதகல் அரசடி சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் சங்கத் தலைவர் சு.கதிரமலை தலைமையில நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி கமலா இராமநாதன் எழுதிய 'கந்தரனுபூதி' என்ற நூலும் இந்நிகழ்வில் வெளியிடப்படவுள்ளது. (-4-13)

## கருத்தரங்குத் தொடர்

யாழ்ப்பாணம்,ஜூன்2

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையமும், விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கன கடன் உதவுக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்தும் சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கின் இரண்டாவது தொடர் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் த.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் 'அரச நிர்வாகிகளும் மக்களுக்கான அவர்கள் பணிகளும்' என்ற தலைப்பிலும், சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதன் 'இன்றைய சேமிப்பு நாளை எம்மை வாழ்விக்கும்' ஏன்ற பொருளிலும் கருத்துரைகளை வழங்குவார்கள். (ரி-4)


**N.E.I நல்லூர்**
*SPOKEN ENGLISH and GRAMMAR*
**By: BRITTO**
ஆரம்பம்: 03.06.2004
(செவ்வாய், வியாழன் 2.15p.m.)
(32588)



# வாழ்த்துகின்றோம்

இன்று 02-06-2004 புதன்கிழமை இல்லற வாழ்வில் இணையும்





**மணிவர்ணன்** (வர்ணன்)
சாவகச்சேரி

**சோபினி** (சோபி)
கல்வியங்காடு

புதுமணத் தம்பதியினரை சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (32425)

**துர்க்கா மில்,** (42-14-26-38)
**ரவிச்சந்திரன் குடும்பத்தினர்.**



# UNIVAC

*College of Information Technology*
*Affiliated To Bangalore University*

இலகு தவணை முறைக் கொடுப்பனவு வசதிகள்.
ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவார்கள்.
British ACP , NICT (USA) நிறுவனத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
காலவரையறையற்ற செய்முறை பயிற்சிகள்.
படிப்பதற்கு இலகுவான முறையில் பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.
மேற்படிப்பை Bangalore university இல் தொடர்வதற்கான வாய்ப்புகள்.

**Very Soon Bangalore University Degree Courses**

**Diploma Courses**
microsoft office 2000& XP 6 months
Computer hard ware 6 months
Photo Shop with 3D Cool 3 Months

A/L மாணவர்களுக்கான GIT

**Certificate Courses**
Ms Word XP
Ms Excel XP
Ms Access XP
Internet & E -mail
Children Program

**STARTING ON 10 TH JUNE 2004**

| | | | |
|---|---|---|---|
| #78, Elephant -Rock Rd, 111 Block, Jejanagar, Bangalore. | Nigarai Rd, Chankanai, Jaffna. | # 527, K.K.S. Rd, Milk White, Jaffna. | Vipulanantha -College Rd, Pandarikulam, Vavunija/ Mullithivu. |

(C-35336)(38-14-26)



# CHUNDIKULI GIRLS' COLLEGE OLD GIRLS' ASSOCIATION, JAFFNA

THE ANNUAL GENERAL MEETING AND FELLOWSHIP LUNCH

Date: Saturday 5th June 2004.
Venue: College Hall

**AGENDA**

9.30 a.m - Holy Communion and worship Service at St.John the Baptist's Church, Chundikuli.
11.30 a.m - A.G.M.
1.00 p.m - Lunch
Lunch ticket - Rs 125/=

**OLD GIRLS ARE CORDIALLY INVITED**

(C/35348)(42-14-26-38) - Secretary.



# யாழ்ப்பாணத்தில் புதியதொரு முயற்சி!!

**A/L முடித்துவிட்டு இருக்கும் மாணவர்களுக்கு**
**ஓர் அரிய சந்தர்ப்பம்..........**
**குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் வளம்பெற...!**

## நேரடி ஒலிபரப்பாளர் பயிற்சிநெறி!
## ஊடகவியலாளர் பயிற்சிநெறி!

என்றும் புதுமையை வழங்கும் ஜோ-எகட்டன் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பயிற்சிநெறி!

▲ கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
▲ மிகப் பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள் பயிற்சிகளை வழங்குவார்கள்.

பயிற்சிக்கான முழுக்கட்டணம் ரூபா 5000/= மட்டும்

ஆரம்பம் ஜூன் நடுப்பகுதி

பதிவுக் கட்டணம் ரூபா1000/=

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள்**

★ தமிழ்மொழியில் திறமைச் சித்தி. ஆங்கிலத்தில் சாதாரண சித்தியுடன் க.பொ.த.சாதாரணதரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.
பதிவுக்கட்டணம் ரூபா 1000/= இற்கான காசுக்கட்டளையை 'Zenith Marketing and Advertising Systems' என்ற பெயரில் சுண்டுக்குளி தபாலகத்தில் மாற்றக்கூடியதாக விண்ணப்பத்துடன் அனுப்பவும்.
அனுப்ப வேண்டிய முகவரி: செனித் மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
*மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.*
மேலதிக விவரங்களுக்கு: தொ.பே.இல: 222-7227
★ அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

(சி-35260)(34-14-26-38)

MY 1ST BIRTHDAY MY 1ST BIRTHDAY MY 1ST BIRTHDAY MY 1ST BIRTHDAY

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



வீநாயகர் வீதி, நல்லூர் வடக்கில் வசிக்கும்

**ஜெயந்தன் – பிரியா**

தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## சஞ்ஜீவ் சரன்






தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02.06.2004) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பூட்டி, அப்பம்மா, அம்மப்பா, குணம் பெரியப்பா, சுதா பெரியம்மா, கனடாவில் வசிக்கும் தியாகினி அத்தை, கிரி மாமா, கவினி மச்சாள், வருண் மச்சான், சித்தப்பாமார் றொபேட், கேதீஸ், கோணேஸ் மாமா, அபி மாமி, கரன் மாமா, லிங்கன் மாமா, குமார் பெரியப்பா, ரட்னேஸ் பெரியம்மா, மேதா அக்கா, கிஷோர் அண்ணா, தங்கைமார் வைஷ்ணவி, ராகவி ஆகியோரும் உற்றார், உறவினர்களும் ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
**கு.ஜெயந்தன் தம்பதிகள்,**
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7512

(C/33534) (22-15-14)

# மண மங்கள வாழ்த்து



**மணமகன்**
திருவளர் செல்வன்
**மணிவர்ணன் (வர்ணன்)**
(வாணி ரெக்ஸ்),
**மணமகள்**
திருவளர் செல்வி
**சோபினி (சோபி) (ஆசிரியை)**
இவர்கள் இருவரும்
ஆல்போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றி
பதினாறு பேறுகளும் பெற்று
சகலசௌபாக்கியங்களுடனும்
பல்லாண்டு வாழ மனமகிழ்வுடன்
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**வாணி ரெக்ஸ் ஊழியர்கள்.**

இல.11. நவீன சந்தை (உட்புறம்) சாவகச்சேரி.

31. பெரிய கடை யாழ்ப்பாணம்.

(C/35288)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருடம் வைகாசி மாதம் 21ஆம் திகதி (03.06.2004) வியாழக்கிழமை பகல் 8.55 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள கடக லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**கஜேந்திரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பத்மரேகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி லிங்கரட்ணம் கிரிசாம்பாள்
18/1. கலட்டி அம்மன் வீதி.
யாழ்ப்பாணம்.

இருவீட்டார் அழைப்பு

திரு.திருமதி செ.வடிவேல்
மட்டுவில் வடக்கு.
சாவகச்சேரி

(32645)(13-14-33)

## கணனி அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,ஜூன்2

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றம் நடத்தவுள்ள கணனி பயிற்சி நெறிக்கு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மன்ற உறுப்பினர்கள் இரண்டு கணனிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (4-135)

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்.தபாலக விளையாட்டுக் கழகத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

தலைவராக ஏ.தர்மராஜாவும், செயலாளராக எஸ்.மோகன்ராஜும் பொருளாளராக ஆர்.ரகுபதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (10-5-190)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

தெல்லிப்பழை,ஜூன்2

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான கடிதங்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இக்கடிதங்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகளை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பிரதேசசெயலர் க.குணராசா அறிவித்துள்ளார். (10-ரி)

## நாடக நூல்கள்

அராலியூர்
ந. சுந்தரம்பிள்ளையின்

1. யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50/=
2. எங்கள் நாடு ரூபா 75/=
3. வானொலி நாடகம் எழுதுவது எப்படி? ரூபா150/=

(32642)(35)

## காசாளர் தேவை

பண்டத்தரிப்புப் பகுதியில் அமைந்துள்ள புகைப்பட நிலையத்திற்கு பெண் பணியாளர் தேவை. வேலை பழக விரும்புபவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல.2283
(32639) மே/பா உதயன்

## வீடு விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் கண்டுக்குளிப் பகுதியில் நல்ல அயலில் 5 பரப்புக் காணியில் 4அறையுள்ள விசாலமான வீடு விற்பனைக்கு உண்டு (தரகர் தேவையில்லை). தொடர்பு: T.P No: 0777-570291 (32637)

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



**02.06.2004**

ரவீந்திரன் - நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் சுரீஸ்

இன்று (02.06.2004) புதன்கிழமை தனது 2ஆவது பிறந்த தினத்தை ஜேர்மனியின் கம்பொர்க் தலைநகரத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அம்மப்பா, அம்மம்மா, அக்காமார், அத்தைமார் ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
**மு.விஜிகரன்**
(சித்தப்பா).

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை.

(32571) (26-33-13-14)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அலுவலக நடைமுறைக்கோவை

## விரைவில் வழங்குவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி,ஜூன்2

உள்ளூராட்சி மன்றங்களுக்கான அலுவலக நடைமுறைக் கோவைப் புத்தகத்தினை. மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் விரைவில் தமிழ் மொழியில் வெளியிடவுள்ளது.

சிங்கள மொழியில் ஏற்கனவே வெளியிடப்பட்ட இப்புத்தகத்தினை. தமிழ்மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து சகல மாகாணங்களிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு. வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை உள்ளூராட்சித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

உள்ளூராட்சி பற்றிய வரலாற்றுச் சுருககம், தற்போதைய உள்ளூராட்சி முறைமை மற்றும் அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள், சபையின் நடவடிக்கைகள் போன்ற விடயங்கள். இதில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சபைத் தலைவர்கள் தொடக்கம் ஏனைய உத்தியோகத்தர்களின் கடமைகள், உபவிதிகள் ஆக்கம் மற்றும் சூழல் சம்பந்தமான நடைமுறைகளும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

(4-117)

### உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் உள்ள

# ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்2

வடக்குக் கிழக்கிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு தலா 40ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் தே.து.விஜயலட்சுமி சகல உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 72சபைகளின் கீழ் வரும் உள்ளூராட்சி ஆயுள்வேத வைத்தியசாலைகள் ஒவ்வொன்றுக்கும் தலா 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு உள்ளதாகவும் இனி வரும் காலங்களில் ஒரு நோயாளிக்கு 20 ரூபா என்ற வகையிலும், நோயாளர் வரவு, சனத்தொகை, பிரதேசத்தின் தன்மை ஆகிய அடிப்படையிலேயே நன்கொடையின் அளவு தீர்மானிக்கப்படும் எனவும் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் இயங்கி வரும் ஆயுள்வேத வைத்தியசாலைகளின் சேவை விவரங்களைச் சபைகளின் செயலாளர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மற்றும் ஆலோசனைச்சபை உறுப்பினர்கள் கவனித்துக்கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சபைக்கும் ஒதுக்கப்பட்ட அளவுத் தொகைக்கு ஏற்ப இலங்கை ஆயுள்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மருந்து வகைகள் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஒதுக்கப்பட்ட தொகை போதாது விடின் அதுபற்றிய விவரமான அறிக்கையை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரூடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(10-185)

# சட்டவிரோத மணல் அகழ்வு அரியாலையில் தொடர்கிறது

## கடல்நீர் குடிமனைக்குள் புகுந்துவிடும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

சட்டவிரோத மணல் அகழ்வினால் அரியாலை, முள்ளிப் பிரதேசம் கடலில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக அரியாலை, முள்ளிப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது.

மணல் அகழ்வு இடம்பெறுகின்ற பிரதேசத்துக்கு அருகாக கொழும்புத்துறைக் கடல் பிரதேசம் உள்ளது. இதனால், அங்கு மணல் அகழ்வின் போது ஏற்படும் பாரிய குழிகளுக்குள் கடல் நீர் புகுந்துவிடக்கூடிய நிலைமை உள்ளது. அத்தகைய நிலை ஏற்பட்டால் பின்னர் அதிலிருந்து குடிமனைகளுக்குள்ளும் கடல் நீர் புகுந்துவிடும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் மட்டும் அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சுமார் நூறு உழவு இயந்திரங்கள் யாழ். பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக வழககுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் அவ்வப்போது கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் இத்தகைய சட்ட விரோத மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் யாழ்.நீதிமன்ற நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (4-7)

# நெல்லியடி சுகாதாரப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நாளைமுதல் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய்த் தடுபபு மருந்து ஏற்றப்பட இருப்பதாக நெல்லியடிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.இளங்கோ அறிவித்துள்ளார்.

மேற்படி தடுப்பூசி போடும் இடங்கள் மற்றும் நேரம் போன்ற விவரங்கள் வருமாறு:-

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை வதிரி புலவராவோடை சனசமூக நிலையம் பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணிவரை வதிரி சிகிச்சை நிலையம்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நெல்லியடி தடங்கன் புளியடி சனசமூக நிலையம், பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணிவரை கலட்டி சனசமூக நிலையம்.

5 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நாவலர் மடம் கால்நடை வைத்திய சாலை, பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணிவரை முடக்காடு சுடர் ஒளி சனசமூக நிலையம்.

7ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை கட்டைவேலி சிகிச்சை நிலையம்.

காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரை கரவெட்டி மத்தி சனசமூக நிலையம் (4-7)

### தெல்லிப்பழை பாதுகாப்பு வலயப் பகுதியில்

# இரவில் பயிர்களை நாசப்படுத்தி விட்டு பகலில் முகாம் பகுதிக்குள் ஒளியும் பன்றிகள்

ஏழாலை,ஜூன்2

தெல்லிப்பழை கிழக்கில் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளை அண்டிய விவசாய நிலங்களில் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருந்து இரவு வேளைகளில் வருகின்ற பன்றிகள் பயிர்களை நாசம் செய்வதாகவும் காலையில் அவை இராணுவ முகாம் பகுதிக்குள் சென்று ஒளித்துக்கொள்வதால் அவற்றைப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்திருக்கின்றனர்.

அண்மையில் இப்பகுதியில் உள்ள சிவலிங்கம் என்பவரது தோட்டத்தினுள் இரவு வேளையில் புகுந்த பன்றிகள் அங்கிருந்த மரவள்ளி மற்றும் வேறு சில பயிர்களையும் முறித்தடித்து நாசம் செய்துள்ளன. இதனால், அவருக்கு சுமார் 25 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு பயிர்களை நாசப்படுத்தும் பன்றிகளை அழிப்பதற்கு ஒத்துழைக்குமாறு இப்பகுதி படைமுகாம் பொறுப்பதிகாரியிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்திருக்கின்ற போதிலும் இதுவரை படைத்தரப்பிலிருந்து எந்தவித ஒத்துழைப்பும் கிடைக்கவல்லை எனவும் விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (4-45)

## இலக்கியபேரவையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்2

இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை. காலை 10 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறு துறை சார்ந்த எழுத்தாளர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பேரவையினால் வழங்கப்பட்டு வரும் பரிசில்களைப் பெறுவோரின் விவரம் ஏற்கனவே வெளியாகியது.

(10-ரி)

# எதையும் தாங்குமா இதயம்...?



இருதய நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இராஜ யோகப் பயிற்சி மிகவும் பயனளிப்பதாகும் என கட்டுரையாளர் டாக்டர் சதீஸ்குமார் குப்தா (இருதய வைத்திய நிபுணர்) விளக்குகிறார்.

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் மவுன்ட் அபு என்ற இடத்தில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இவர், இதுபற்றி விரிவாக ஆய்வுகள் நடத்தியுள்ளார். ஆய்வுகளால் கண்ட உண்மைகளை இக்கட்டுரையில் தந்துள்ளார் இருதய நோய் வைத்திய நிபுணரான அவர்.

இவரது கட்டுரையின் இரண்டாவது பகுதி கடந்த 26ஆம் திகதி உதயனில் வெளியாகி இருந்தது. இது மூன்றாவது பகுதி.

பதற்றம் அல்லது அழுத்தம் (Stress) ஏற்படுகின்ற போது பரிவுத் தொகுதியானது தூண்டப்படுகின்றது. அதனால் இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது; குருதி அழுத்தம் அதிகரிக்கின்றது. நாடிகள் சுருங்குகின்றன. அதனால் இதயத்திற்கான இரத்த விநியோகம் குறைகின்றது. இதயத்துடிப்பின் ஒழுங்கு குழம்பி ஒழுங்கற்ற இதயத்துடிப்பு, இதயத்தின் நாடிகளின் உட்சுவர்களில் காயங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, கொலஸ்ரோல் இலகுவில் நாடிகளில் உட்புகுகின்றன. நாடிகளின் சுவரில் படிந்துள்ள கொழுப்புப்படிவில் வெடிப்பு ஏற்படக்கூடும். அழுத்தம்(Stress) ஏற்படும்போது குருதி தடிப்புடையதாகி உறையத் தொடங்குகிறது. தளர்வடையும் போது (Relax) குருதி மெல்லிய தன்மை உடையதாகி பாயத் தொடங்குகிறது.

தனிமையை உணர்பவர்கள் தங்களைக் கவனிக்க, தங்கள் மேல் அன்பு செலுத்த யாரும் இல்லை என எண்ணுபவர்கள் மாரடைப்பின் பின் மரணமடையும் வாய்ப்பு நான்கு மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது. துன்பத்திலும் இன்பத்திலும் ஒருவருக்கு ஒருவர் ஆதாரமாக இருப்பது, அன்பு செலுத்துவது ஆகும். ஆகவே, அன்பு, சமுதாய ஆதரவு என்பவற்றினால் ஏற்படக்கூடிய விளைவு மருந்துகளிலும் பார்க்க அதிகமான தாகக் காணப்படுகின்றது. மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கக் கூடிய நல்ல மருந்தாக அமைகின்றது. தங்களுடைய உணர்வுகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியாத பயம உடையவர்கள் மற்றவர்களை நம்பாதவர்கள் மாரடைப்பின் பின் 6 மாத காலத்திற்குள் மரணமடைகின்ற வாய்ப்பு 3 மடங்கு கூடுதலாகக் காணப்படுகிறது.

உணர்வுபூர்வமாக எங்களுக்கு ஆதரவு காட்டக்கூடிய ஒருவரிடமே நாம் எம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறோம்.

ஆனால், உணர்வுபூர்வமான ஆதரவு இல்லாதபோது உதாரணமாக ஒரு மனைவி தன் கணவரிடம் இரகசியங்களை, மனதை, உணர்வுகளைச் சொல்லமுடியாதபோது இதய பாரம் அதிகரித்து அடைப்புகள் ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சமுதாயத்தில் தனிப்பட்ட உணர்வு, அன்புக் குறைவு, பாதுகாப்பு இன்மை போன்ற உணர்வுகள் மரண வீதத்தை இரண்டு மடங்கு அதிகரிக்கச் செய்கின்றன.

### கோபத்தின் விளைவுகள்

கோபத்தினால் ஏற்படக்கூடிய தாக்கத்தைப்பற்றிய ஆராய்ச்சியானது இருதய நோய்கள் இல்லாத 1305 நபர்களில் மேற்கொள்ளப்பட்டது. இதுபற்றி பிரபலமான மருத்துவ பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கோபத்தை அளவிடுவதற்கான ஓர் அளவுமுறை அவர்களுக்கு கொடுக்கப்பட்டு ஏழுவருடகாலமாக அவர்களை அவதானித்தபோது மூன்று பிரிவுகளாக அவர்கள் வகைப்படுத்தப்பட்டார்கள்.

1) குறைவான கோபம் உடையவர்கள்.

2) நடுத்தரமான கோபம் உடையவர்கள்

3) கடுமையான கோபம் உடையவர்கள்.

ஏழு வருடகாலத்தில் இவர்களில் 110பேருக்கு இருதய நோய் ஏற்பட்டது.

குறைவான கோபம் உடையவர்களில் மூன்று பேரும் நடுத்தர கோபம் உடையவர்களில் 21 பேரும் கடுமையான கோபம் உடையவர்களில் 26பேரும் மாரடைப்பு நோயால் தாக்கப்பட்டார்கள். இதிலிருந்த எந்தளவுக்கு கோபம் அதிகமாக உள்ளதோ அந்தளவுக்கு மாரடைப்பு நோய் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது என்பது தெளிவாகின்றது. கவலைப்படுகின்ற பழக்கமும் மாரடைப்பு நோய் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கிறது.




எதற்கும் அவசரப்படுகின்ற சுபாவம் உடைய ஒருவர் சரியான நேரத்திற்கு உணவு உண்ணமாட்டார். பிழையான உணவுப்பழக்கம் உடையவராக இருப்பார். இலகுவில் உண்ணக்கூடிய உணவையே தேர்ந்தெடுப்பார். அதை மென்று உண்ணவும் அவருக்கு நேரம் இருப்பதில்லை. காலையில் உலாவச்செல்வதற்கும் உடற்பயிற்சி செய்வதற்கும் சரியான நேரத்தில் நல்ல நித்திரை கொள்வதற்கும் மருந்துகளை நேரம் தவறாமல் எடுப்பதற்கும் கூட அவருக்கு நேரம் இருப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் மாரடைப்பு நோயால் கூடுதலாகத் தாக்கப்படுகின்றார்கள்.

மன அழுத்தமானது இருதய முடியுருநாடிகளில் அடைப்பை ஏற்படுத்தி மாரடைப்பை ஏற்படுத்துகின்றது. ஆகவே உளவியல் காரணிகள் மாரடைப்பை ஏற்படுத்துகின்ற முக்கியமான காரணிகளாக அமைகின்றன. முதற்தரம் மாரடைப்பு ஏற்பட்ட பின்னரும் கூட நீங்கள் உங்கள் சுபாவத்தை உணவுப் பழக்கத்தை, உடற்பயிற்சி முறையை, நித்திரை கொள்கின்ற முறையை மாற்றி அமைக்க இல்லையாயின் தொடர்ந்தும் நீங்கள் மாரடைப்பு நோயால் பாதிக்கப்படுவீர்கள்.

### குணமாக்கும் ஆராய்ச்சித் திட்டம்

உணவை, உடற்பயிற்சியை மட்டும் மாற்றினால் போதாது. முக்கியமாக உங்கள் மனதை மாற்றவேண்டும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மூலம் இருதய முடியுருநாடியில் ஏற்படுகின்ற அடைப்பைத் திறக்கச் செய்வதன் மூலம் இந்த இருதய நோய்களை குணமாக்குகின்ற இந்த ஆராச்சியானது பல்வேறுபட்ட அம்சங்களையும் ஒழுங்குமுறைகளையும் கொண்ட ஒரு திட்டமாகும்.

இதிலே மனதை ஆராயக்கூடிய உளவியல் நிபுணர்கள், உடற்தொழிற்பாட்டினை ஆராயக்கூடிய உடல் தொழிற்பாட்டியல் நிபுணர்கள் ஓமோன்களை பற்றிய அறிவுடைய அகஞ்சுரக்கும் தொகுதிபற்றிய விஷேச அறிவுடைய நிபுணர்கள், அஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை(By pass) சத்திர சிகிச்சை செய்யவல்ல இருதய நிபுணர்கள், உயர்குருதி அழுத்தம், நீரிழிவு நோய் போன்றவற்றைக் குணமாக்கவல்ல வைத்திய நிபுணர்கள், உணவைப் பற்றிய ஆலோசனை வழங்கவல்ல நிபுணர்கள், ராஜயோக தியானத்தைக் கற்றுக்கொடுப்பதன் மூலம் எவ்வாறு அமைதியாக வாழ்வது? மன அழுத்தத்தினை வெற்றி கொண்டு எவ்வாறு வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்வது என்று கற்றுக் கொடுக்கவல்ல ஆன்மீக நிபுணர்கள் போன்ற பலரின் ஒத்துழைப்புப் பெறப்பட்டது. இந்த ஆரோக்கியமான வாழ்க்கை முறை திட்டத்தில் நடுத்தரமான, கடுமையான இருதயநோய் உடையவர்கள் பங்குபற்றினார்கள். மீண்டும் 2 வருடங்களின் பின் அஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டிய நோயாளிகள் அஞ்சியோ பிளாஸ்டி அல்லது சத்திர சிகிச்சை முறையை விரும்பாத நோயாளிகள் மற்றும் கடுமையான அடைப்புக்காரணமாக இந்த சிகிச்சை முறைகளுக்குப் பொருந்தாத நோயாளிகள் என பல்தரப்பட்டவர்களும் இதில் கலந்துகொண்டார்கள். யார்,யார் இதில் கலந்துகொள்ள விரும்பினார்களோ எல்லோரும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். திறந்த நிகழ்ச்சித் திட்டமாக (Opentrial) அமைந்தது.


நோயாளிகளுக்கு இருதய நோய் சம்பந்தமான சகல விடயங்களும் கூறப்பட்டது. எவ்வாறு இந்த இருதய முடியுரு நாடிகளில் ஏற்பட்டுள்ள அடைப்பை விரிவடையச் செய்யலாம் என்றும் கூறப்பட்டது. 123 நோயாளிகள் ஒவ்வொரு 6 மாதகாலத்துக்குப் பின் அழைக்கப்பட்டு இது சம்பந்தமாக ஆராயப்பட்டது. 2வருடங்களின் பின் அவர்கள் மீண்டும் ஒரு முறை அஞ்சியோகிராப் (Angiography) என்ற விஷேச சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதன் மூலம் இந்த அடைப்புக்கள் மீண்டும் திறந்துள்ளனவா? இல்லையா? எனப் பார்க்க முடியும்.

இதுவரை யாராலும் எந்த ஒரு தியான முறையாலும் மற்றும் மருந்துகளாலும் கூட 1-2 வீதத்தை தவிர இந்த அடைப்புக்களைத் திறக்க முடியாது இருந்தது.

1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த ஆராய்ச்சித் திட்டத்தில் உடற்பயிற்சி குறைந்த, கொலஸ்ரோல், அதிக நார்ப்பொருள் கொண்ட உணவுப் பதற்றத்தில் இருந்து விடுபட இராஜயோக தியானப் பயிற்சி போன்றன பயன்படுத்தப்பட்டன. கொலஸ்ரோலைக் குறைக்கின்ற மருந்து வகைகள் பயன்படுத்தப்படவில்லை.

(வளரும்)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



மலர்வு 20 - 11 - 1948

உதிர்வு 03 - 05 - 2004

### வலத்தீஸ் பாக்கியநாதன்

(ஓய்வுபெற்ற ஊழியர், K.K.S.சிமெந்து கூட்டுத்தாபனம்)

பெற்றமகனாக எனைக்காத்து, அன்புச்சகோதரனாக எமக்கு ஆறுதலாக இருந்து எம்மைக் காத்த அன்புத் தெய்வத்துக்கு ஆறாத் துயரத்துடனான எம் கண்ணீர் அஞ்சலி.

மாமி : நா.இலட்சுமி
மைத்துனி: நா.மல்லிகா
மருமகன்: த.இந்துஜா
பேத்தி: இ.ரஜித்தா

(32631)(35-21-13-12)

## 6ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 – 06 – 1908

மறைவு 10 – 06 – 1998

நெல்லியடியின் முதல் வர்த்தக ஸ்தாபகர்
முன்னாள் பிரபல வர்த்தகர்

### அமரர் குமாரசாமி கந்தவனம்

எமது அன்புத் தெய்வம் இறையடி சேர்ந்து
ஆறு ஆண்டுகள் ஆனாலும் ஆறவில்லை எம்மனம்
அன்னாரின் நினைவாக அவரது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல நெல்லை முருகனின் பாதார விந்தங்களைப்
பணிந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

விண்மீன் அங்காடி,
குமாரசாமி கந்தவனம் பில்டிங்,
பிரதான வீதி, நெல்லியடி.

- குடும்பத்தினர்.

(32423)(42-13-19-21)

## 43ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 1956 – 07 – 25

மறைவு 2004 – 04 – 21

### அமரர் செல்லையா தர்மகுலசிங்கம்

(பிரபல மெக்கானிக்)

அன்புக்கும் ஆதரவுக்கும் பண்புக்கும் இலக்கணமாயிருந்தீர்
என்றும் உமது நினைவு எங்கள் நெஞ்சங்களில் நிழலாடும்
இன்று உங்களை எண்ணி ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்

இன்று (02-06-2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சல்வரும், உரும்பிராய் தெற்கு.

அன்புத் தாயார்,
சகோதர, சகோதரிகள்.

(32458)(21-13-19-42)

## நான்காம் ஆண்டு நினைவு



மலர்வு 1929 – 01 – 18

உதிர்வு 2000 – 05 – 18

### அமரர் வல்லிபுரம் சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர்)

திதி: 02-06-2004

ஆண்டுகள் நான்காகியும் உங்கள்
அன்பும் பாசமும் பிரிவும் என்றும்
மனதை விட்டகலாதே ஐயா.......

"சிவஸ்தான்",
தச்சனோடை,
புலோலிதெற்கு,புலோலி.

உங்கள் மறைவால் வாடும்:
மனைவி, மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

(32625)(42-19-13-21)

### வாகனக் கடத்தல்

பேருவளை,ஜூன்2

பெற்றோல் நிரப்புவதற்காக எரிபொருள் நிலையத்திற்கு வந்த வான் ஒன்று மூவர் அடங்கிய கோஷ்டியினால் கடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் அதிகாலை பேருவளை எரிபொருள் நிலையம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது. சாரதியை துப்பாக்கி முனையில் கீழே இறக்கிவிட்டு வான் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. (க)

### திருஞானசம்பந்தர் திருவுருவப்படம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் குருபூசையை முன்னிட்டு சுவாமிகளின் திருவுருவப் படங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திருவுருவப்படங்களை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் மற்றும் கே.கே.எஸ். வீதியில் உள்ள மில்க் வைற் சோப் தொழிலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம் என்று தொழிலதிபர் இ.தவகோபால் சகல பாடசாலைகள், இந்து சமய, இளைஞர் மன்றங்கள் மற்றும் சனசமூக நிலையங்களுக்கு அறிவித்துள்ளார்.

### புதிய கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி காயம்

புதிதாகக் கட்டிய கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் கட்டடத்தொழிலாளியொருவர் காயமடைந்தார். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலை வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை ஜெயபாலன் (வயது28) என்பவரே காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-117)

### அனலைதீவு வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதி

குருநகர்,ஜூன்2

அனலைதீவு சுற்றுவல்கூறு வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இவ்வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் ஜி.திஸ்ஸகுமார மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொள்வதற்கு ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் தொலைபேசியையே தாம் தற்பொழுது பயன்படுத்தி வருவதாகவும் இது தமக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-51)

### தோட்டத் தொழிலாளி வீடு இடிந்து பலி!

பேருவளை,ஜூன்2

கடும் மழை, புயல் காற்றினால் வீடு இடிந்து விழுந்ததில் தோட்டத் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை களுத்துறை மாவட்டத்தில் உள்ள நில்டன் அரச தோட்டத்தில் இடம்பெற்றது. எஸ்.பொன்னன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (க)

### அரசியல் பிரமுகர் வீட்டில் துப்பாக்கி

வடமேல் மாகாணசபையின் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரின் வீட்டில் ரீ-56 ரகத் துப்பாக்கி ஒன்றும், கைத்துப்பாக்கிகள் இரண்டும், ஒரு தொகை துப்பாக்கி ரவைகளும் சிலாபம் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர். (க)

### போதனா வைத்தியசாலையில் உளமருத்துவச் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். போதனா வைத்தியசாலையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமை கிழமையும். காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணி வரையும் சிறுவர் உளமருத்துவச் சிகிச்சை நடைபெற உள்ளது.

சிறுவர்களுக்கான உளமருத்துவ சிகிச்சைகளை கொழும்பிலிருந்து இங்கு வருகை தரவுள்ள உள மருத்துவ நிபுணர் வழங்குவார் என உள மருத்துவப் பிரிவு சமூக சேவையாளர் அறிவித்துள்ளார். (10-ரி)

## நீங்காத உங்கள் நினைவுகளுடன் ஓராண்டு



மண்ணில் 28 - 11 - 1928

விண்ணில் 15 - 05 - 2003

### அமரர் காசிப்பிள்ளை மயில்வாகனம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி: வைகாசி விசாகப் பௌர்ணமி


பூரண நிலவு நாளில் புத்தனின் முத்தியைப் போல்
காரண கருமத்தோடே காலனும் உம்மைத் தொட்டான்
வேல் ஆயுதம் உம்மை அன்று அமரர்கள் ஏற்றார் எனினும்
பாயுதே கண்ணீர் நெஞ்சைப் பிளந்து உங்கள் பிரிவினாலே
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் எனும் வள்ளுவத்தை
எண்பித்து உயிர் வாழ்ந்த உத்தமரே - நானின்
கண்பட்டுக் கவர முடியாது காலன் உம்மை
புண்பட்டு விழ்த்தியோ சென்றான்
ஆசிரியராய் இருந்து ஆயிரமாய் மாணவரைப்
பேசிய ஞானமுறச் செய்தீர் - என்றும்
நேசமுறு வார்த்தைகளால் நல்லவையை நாடவைத்து
தேசமுயர் வேதநெறி தந்தீர்
நற்குடியும் நற்பெயரும் நற்றவத்தால் வருவதென
சற்குரவர் கூறியது மெய்யே - இப்
பொற்கருத்தின் பொருள் உணர்த்திப் புவி வாழ்ந்த
புண்ணியரே எப்பிறப்பும் இல்லை இனி உமக்கு.

"கோவில் வளவு"
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

உங்கள் நினைவுகளை சுமந்திருக்கும்:
குடும்பத்தினர்

(32627)(38-13-19-21)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1937 - 11 - 20

மறைவு 2001 - 06 - 05

### அமரர் சிவசம்பு சிவயோகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற பிரதிப் பிரதம தபாலதிபர்)

திதி: 2004.06.02

பாசத்தைப் பொழிந்து
பாரினில் சிறப்புற வாழ
வழிகாட்டிய தந்தையே!
தங்கள் விருப்பங்களே
எங்கள் இலட்சியமாக.
தங்கள் நினைவுகளே
எங்கள் வாழ்வாக.
காலமெல்லாம் வாழ்வோம்.

முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

(32613)(35-21-13-19)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 05 - 1958

உதிர்வு 13 - 06 - 2003

### அமரர் பூபாலகிருஸ்ணன் தேவராசா

(ராசு, அபிராமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

திதி: பூரணை 02-06-2004

ஆண்டு ஒன்று சென்றதையா
ஆனால் உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வுபோல் இனி வருமா?
அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
உன்பால் நாம்கொண்ட பாசமும் நேசமும்
உங்களையே நிதம் எண்ணிக் கலக்க வைக்கிறதே
எங்கள் வாழ்வில் ஒளியேற்றிவைத்த – ஐயா!
பாசதீபமே ஐயா!
என்றும் உன் நினைவு நெஞ்சில் நிலைக்கிறதே ஐயா!
மங்காத மணிவிளக்காய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
உங்கள் திருமுகத்தை மறக்கமுடியாது
ஐயாவே மறக்கவே முடியாது.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக நடைபெறுகின்ற இன்றைய (02.06.2004) மதியபோசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மாதர்வளவு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.


உங்களை மறவாத
அன்பு மனைவி: யமுனாராணி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(32583) (26-13-19-21)

உ
ஓம் சக்தி



# மானிப்பாய் - சுதுமலை
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான



# தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## 02-06-2004

## சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் ஆசியுரை

தேவஸ்தான பிரதமகுருக்கள், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி கிரியாகலாப முக்தாமணி, சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக் குருக்கள் அவர்கள் உலகின் ஸ்ரீமாதாவாகவும், ஜகன்மாதா வர்கவும், புவ னத்திற்கு ஈஸ்வரியாகவும் விளங்கும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சௌந்தர்யப் பெண்ணாக சித்திரத் தேரில் இன்று ஆரோகணித்து வருவதையிட்டு இச்சிறப்பிதழுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஊருக்குச் சிறப்பு ஆலயம். அவ்வாலயத்தின் கருவறையிலுள்ள மூலவர் உற்சவமூர்த்தி என்ற பெயருடன் ஆலயத்தில் இருந்து வெளிப்புறத்தில் வீதியுலாவாகி வெளிவருவதை உற்சவம் என்று காரணாகமம் குறிப்பிடுகிறது. மேலும் ஐந்து நாள்களுக்கு மேல் தொடர்ந்து செய்யும் வீதியுலா "மகோற்சவம" அல்லது "பிரமோற்சவம்" எனப் பெயர் பெறும்.

இவ்உற்சவத்தின் பெரும் திருவிழாவாக ஸம்ஹாரம் என்னும் அழித்தலைக் குறித்து நடத்தப்பெறும் உற்சவம் ரதோற்சவம் எனப்படுகிறது. ரதோற்சவதினம் மிகவும் சிறப்பானதாகவும், முக்கியமானதாகவும் ஒற்றுமையின் இடமாகவும் ஆலயத்தின் கண் விளங்குவதைக் காணலாம். இதனையே "ஊர்கூடி தேர்வடம் பிடிப்போம்" என்னும் உயர் சிந்தனை கொண்ட முதுமொழியினால் அறிய முடிகிறது.


ஒரு நாட்டில், ஓர் ஊரில், ஒருகிராமத்தில் ஆலய உற்சவமும், ரதோற்சவமும் இனிது நடைபெற்றால் ஊருக்குச் சிறப்பு; நாட்டுக்குச் சிறப்பு; மக்களுக்குச் சிறப்பு; அரச நீதிக்குச் சிறப்பு; மக்களின் மகோன்னத வாழ்வுக்கு வீடு பேறு, செல்வச் செழிப்பு என ரதோற்சவத்தின் பலன்கள் பலவாறு கூறப்பட்டுள்ளன.

இவ்வகையான பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட ரதோற்சவம் எமது ஊரின் புனித கேந்திரஸ்தானமாகவும் புவனேஸ்வரி மூர்த்தமாகவும் சக்தி பீடமாகவும் விளங்கும் அன்னை பராசக்தி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடைபெற அம்பிகை திருவருள் கைகூடியுள்ளது.

தங்குசங்களை, வற்றாப்பளை, மனோன்மணி என்னும் வரலாற்றைச் சிறப்பித்து புவனேஸ்வரியாக அம்பிகை நாமம் கொண்டு சிங்காரரஸ ஸம்பூர்ணாவாக அலங்கரிக்கப்பட்டு வேண்டுவார் வேண்டுவதை அதிகம் கொடுக்கும் வாஞ்சிதார்த்தப் பிரதாயினியாகவும், அறியாமையைப் போக்கும் அவ்யாய கருணா மூர்த்தியாகவும் அம்பாள் தேரில் ஆரோகணித்து வருகிறாள்.

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்ற அனுபூதி மஹான்களின் வாக்குக்கேற்ப நாட்டு மக்கள், ஊர்மக்கள், அம்பிகை அடியார்கள் , ஆலய தர்ம கர்த்தாக்கள், இளைஞர்கள், மாணவ சமூகத்தினர் என எல்லா அனைத்து மக்களும் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை சரணடைந்து அம்பிகையின் பரிபூர்ணமான அனுக்கிரகத்தைப் பெறவேண்டுமெனப் பிரார்த்தித்து இந்நன்னாளில் ஆசிகள் பல கூறுகின்றேன்.

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்.



## தேரேறி வந்திடுவாய் தேவி

*அம்பிகையே ஈஸ்வரியே அகிலாண்ட நாயகியே*
*ஸ்ரீ புவனேஸ்வரியே ஆதிபராசக்தியே தாயே*
*நம்பியே சரணடைந்தோம் நான்மறைகளேத்திடும்*
*நாரணீ தேவி நீ தேரேறி வந்திடுவாய்*
*தும்பிமுகன் தம்பியுடன் அருட்காட்சி நல்கியே*
*திருவீதி வலம் வரும் தேவி மனோன்மணியே*
*வெம்பியழுது நாம் வேண்டியே வடம் பிடித்தோம்*
*வேதவல்லி நீ வேண்டும் வரம் தந்திடுவாய்!*

- திருவரன்.

## "அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம்பெறலாம்"

பல தசாப்தங்களுக்கு முன்னமே சுதுமலைப் பதியிலே தங்குசங்களை, வற்றாப்பளை, பின்பு பர்வதவர்த்தனி, மனோன்மணி என்ற திருநாமத்துடன் தோன்றிய எம் குலதெய்வம் இன்று ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையாகி அருள்பாலித்து வருகிறாள். கடல் சூழ் இலங்கை கஜபாகு வேந்தன் காலத்தில் முக்கியத்துவப்படுத்தப்பெற்ற கண்ணகி அம்பிகை வழிபாட்டோடு தொடர்புடைய நம் அம்பிகை நாகரூபினியாக போற்றப்பட்ட வரலாறும் பேசப்படுகின்றன.

மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய சிறப்புகள் பொருந்தப் பெற்ற சுதுமலை புவனேஸ்வரித் தாய், பூத்தவளாய் புவனம் பதினான்கினையும் காப்பவளாய், கரப்பவளாய், மூவா முகுந்தனுக்கு இளையவளாய், எம்கிராமத்தை மாத்திர மன்றி காத்து வரும் காவற் தெய்வமாகவும் விளங்குகின்றாள்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்று சிலப்பதிகாரம் கூறுவதுபோல, நம்மவரை நாட்டின் நம்மண்ணில் அரசியல் வெற்றிக்கு யார் இடையூறு செய்கிறார்களோ, அவர்களை நெறிகாட்டியும் வழிப்படுத்தியும் காக்கவல்லவள். 30.04.1999 கும்பாபிஷேகம் செய்யப்பட்ட காலம் முதல் புதுப்பொலிவுடன் விளங்கும் எம் அம்பிகை இந்த ஆண்டு அருட்திருச் சக்தியாய் சகல ஜீவதயாநிதியாய் சித்திர ரதமேறிவரும் அருட்காட்சி அற்புதமானது.

அழகிய சிற்பங்களுடன் ஓங்கியுயர்ந்த கோபுரத்தையுடைய சுதுமலை அம்பிகை ஆலயமே அசைந்தாடி வருவதுபோன்ற பிரமைதரும் அந்த அற்புதமான காட்சியை வைகாசி விசாக நட்சத்திரமும் பூரணைத் திதியும் கூடிய இன்று (02.06.2004) புதன்கிழமை காணலாம். ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகைக்கு நாளை (03.06.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

எல்லாம் வல்ல அம்பிகைக்கு ஊரே திரண்டு உரிமையுடன் பயபக்தியாக எடுக்கும் பிரம்மோற்சவம் சிறந்து அருள்பெருக, அனைத்து வளமும் பெருக அம்பிகையை இறைஞ்சி பிரார்த்திக்கின்றேன்.

கு.கணேசதாசன் (J.P.)
தலைவர்,
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்
தேவஸ்தானம்.


## தேர்த்திருவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்

**வி.எஸ்.எம்.ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய்.

**பிரம்யா நகைமாடம்**
யாழ். வீதி, ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.
☎ 021 222 3600

**Saye Digital Com.**
Photo copy, Internet, I.D.D.,
Local calls.
Van for hire
021 - 2223600
021 - 2227131
Alady Junction, Manipay.

**நந்தா புடைவையகம்**
**அன்**
**பான்சி ஹவுஸ்**
யாழ்.வீதி, மானிப்பாய்.
(இலங்கை வங்கிக்கு அருகில்)



**சுந்தர்சன்**
(மத்திய சந்தை முன்பாக)
பிரதான வீதி, மானிப்பாய்.



(26-19) (சி-32358)


சிவமயம்



# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர்
## 02.06.2004









## மகோற்சவ குருவின் ஆசிச் செய்தி

தேரேறிவரும் கும்பழாவளை விநாயகனே போற்றி
தேசமெங்கும் செறிந்துவாழும் எம்மைக் காப்பாய் போற்றி
பாசவினைகளோடு மும்மலங்களை அறுப்பாய் போற்றி
நேசமுடனே சகல மக்களையும் வாழவைப்பாய் போற்றி

சகல வளங்களும் பொலிந்து விளங்கும் அளவை நகரினிலே சகல மக்களையும் சீரோடும் சிறப்போடும் வாழவைத்துக் காத்து அருளும் கும்பழாவளை விநாயகப் பெருமானுடைய தேர் உற்சவம் இன்று(02.06.2004) புதன்கிழமை நடைபெறுகின்றது. இவ்வாலயம் மாருதப்புரவீகவல்லி என்னும் அரசிளங்குமாரியினால் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கும்பழாவளை விநாயகப் பெருமானைத் தேரிலே தரிசித்து வேண்டிய வரங்களைப் பெறுவோமாக. -

தேர்விழாவைக் காணவரும் பக்தர்கள் அனைவரும் சகல நலங்களும் பெற்று வாழ்வாங்கு வாழவேண்டுமென வாழ்த்தி அந்தக் கும்பழாவளை விநாயகனைப் போற்றி எனது ஆசிகளைத் தெரிவிக்கிறேன்.

மகோற்சவ குரு:
**இ.விஸ்வேஸ்வரக் குருக்கள்.**

## ஆசியுரை

கலை, பண்பாடு, சமயாசாரங்களில் தலைசிறந்து விளங்கும் கிராமங்களின் வரிசைகளில் அளவையூரின் சிறப்புத் தனித்துவமானது. பழைமை கொண்ட வரலாற்றுச் சுவடுகளைக் கொண்ட இக்கிராமத்தின் மத்தியில் பழம்பெருமை வாய்ந்த வரலாற்றுப் புகழ்மிக்க அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

அரசிளங்குமாரியான மாருதப்புரவீகவல்லி தனது குதிரைமுகம் குறித்த மனப்பிரமையினை போக்கிக்கொண்ட திருத்தலம் மட்டுமல்லாமல், அந்த அரசிளங்குமாரியினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏழு விநாயகர் ஆலயங்களில் இத்தலமும் ஒன்றாகும். அன்று தொடக்கம் சைவ ஆசார விதி முறைப்படி பூஜை, விழாக்கள், வழிபாடுகள் இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

எம்பெருமானின் கிருபையினால் இக்கிராம மக்கள் சீரும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள். இந்த ஆலயத்தின் வழமையான வரலாற்றுப் புகழ்மிக்க வருடாந்த மகோற்சவம் 24.05.2004 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04.06.2004 பூங்காவனத் திருவிழாவோடு நிறைவேறவுள்ளது. தேரேறிவரும் எம்பெருமானது வருடாந்த மகோற்சவம் இனிது நிறைவேற எம்பெருமானின் ஆசிகளை வேண்டிநிற்கின்றோம்.

தர்மகர்த்தாக்கள் சபையினர், தொண்டர் சபையினர்,
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம், அளவெட்டி.

## அள்ளிப்பருக வாருங்கள்!

ஞானகந்தர் நல்கிய பாலனே
கானமாவள்ளிக்காய்வரும் யானையே
வானிடத்தவர் மாதவர் யாவர்க்கும்
கோனெனும் கும்பளாவளைக் கொம்பனே

அளவெட்டிக் கிராமத்தில் - மத்தியபகுதியில் விளங்குவது கும்பழாவளைத்தலம் - இது தான்தோன்றித்தலம். ஆவளை என்பது அக்காலத்தில் குறிச்சிப்பெயராக வழங்கிவந்தது. எம்பெருமான் இருக்கும் தலம் கும்பிமேடாக இருந்தபடியால் கும்பியாவளை எனப்பெயர் ஏற்பட்டுப்பின் கும்பழாவளை என ஆயிற்று.

இங்கே மகாகணபதியாகவே எம்பெருமான் வீற்றிருக்கின்றார். மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் முற்றாக நீங்கிய இடம் இவ்வாலயத்தின் முற்பகுதியாகிய மாவிழிதிட்டியாகும். அற்புதம் படைத்த பெருமானின் தேர்விழா இன்று நிகழ்கின்றது. ஆண்டவனைக் கண்டு குறைதீர்க்க வாருங்கள் - விமோசனம் பெறுங்கள் - திருவருளை அள்ளிப் பருகுங்கள்.

கலாநிதி அருட்கவி
**சீ.விநாசித்தம்பி M.A.**

## குறைதீர்த்து அருள்புரியும் கும்பழாவளையான் களைபோக்கும் கணபதியாகத் தேரேறி வருகின்றான்



வரலாற்றுச் சிறப்பு மிக்க அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புமிக்கதோர் ஆலயமாகும். இங்கே வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கி அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீவிநாயகப் பெருமான் எழுந்தருளி வீற்றிருந்து அருட்காட்சி தருகின்றார்.

மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசி தனது குதிரைமுகம் பிறர் பார்வைக்கு மாறி தனது பார்வைக்கு மாறாத காரணத்தினால் கணபதி வழிபாட்டின் குறைபாடே எனக்கண்டு கொல்லன்கலட்டி முதல் கல்வளை ஈறாக ஏழு விநாயக வழிபாட்டுத் தலங்களை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கினார் என்றும், இவற்றுள் நடுநாயகமாக விளங்கும் கும்பழாவளை விநாயகரை ஸ்தாபித்து வணங்கியபோது குதிரைமுகம் முற்றாக நீங்கியது என்றும் சரித்திரம் கூறுகிறது. இந்த ஆலயம் மாருதப்புரவீகவல்லியின் வருகைக்கு முன்பே இருந்ததாக ஐதீகம் உண்டு.

மாடுமேய்க்கும் சிறுவன் ஒருவன் மாடுகளை மேயவிட்டு உறங்கிய சமயம் எதிரேயுள்ள மண்மேட்டில் ஒரு சோதி தோன்றியது என்றும், அதனைச் சூழ எருக்கஞ்செடிகள் மிகுந்து காணப்பட்டன என்றும், அதன் நடுவே ஒரு கல்லும் இந்தது என்றும், அவ்வூர் மக்கள் அந்தக் கல்லை வழிபடத் தொடங்கினார்கள் என்றும் கூறப்படுகிறது. அக்காலத்தில் பெருமான் தன்மீது பக்தியுள்ள ஒரு பெண்ணின் கனவில் தோன்றி, "மண்மேட்டில் நானிருக்கிறேன். என்னைப் பிள்ளை என்றும் விநாயகர் என்றும் வழிபடும்படி கூறியதாகவும் கொம்பை ஏந்தியபடி காட்சியளித்தபடியால் கொம்பு - ஆவளை பின்பு மருவி "கும்பழாவளை" என்று வந்தது எனவும் கூறுகின்றனர்.

பசு மாடுகள் கும்பலாக மேய்ந்தபடியால் கும்பழாவளை என்று வந்தது என்றும் கூறுவாருண்டு. இந்த ஆலயமானது நிர்வாகச் சீர்குலைவினால் 1948இல் சமாதானத் தீர்வு காணப்பட்டுத் தர்மகர்த்தா சபை பொறுப்பேற்ற பின்னே பலரும் அதிசயிக்கத்தக்கவகையில் வளர்ச்சியுற்று மூன்று தேர்களும் தேர்முட்டியும் அழகாக அமைக்கப்பெற்று 01.02.2002 இல் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

தனக்குமேல் வேறு நாயகன் இல்லாத காரணத்தினால் விநாயகர் என்றும், சித்திகளை அள்ளித் தருவதனால் சித்திவிநாயகர் என்றும் விளங்குகின்ற கணபதியானவர் இன்று சித்திரத்தேரேறி ஆரோகணித்துச் சிங்காரப் பவனிவரும் கண்கொள்ளாக் காட்சி காணக்கண்கோடிவேண்டும்.

### 'கும்பழாவளைப் பிள்ளையாரைக் கும்பிடுவோம் வாரீர்!

யாழ். மக்கள் இடம்பெயர்ந்த காலத்திலும் இந்த ஆலயத்தில் நியமந் தவறாது பூசைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. விநாயகப் பெருமானின் 32 அழகிய தோற்றங்களும் வரலாற்றுக் காட்சிகளும் நிறைந்த இந்த ஆலயம், இப்போது புதுப்பொலிவுடன் தோற்றமளிக்கின்றது. அநேக அடியார்கள் இங்குவந்து தம் குறைகள்ளயெல்லாம் நிறைவுசெய்து கொண்டு போவதையும் நேர்த்திகளையெல்லாம் பூர்த்திசெய்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்களுக்கு வருகின்ற சகலவிதமான விக்கினங்களையும் நீக்கியருள்கின்ற ஸ்ரீவிக்கினேஸ்வரப் பெருமான் இன்று தேரேறி வந்து ஆரோகணித்து அருள்புரிகின்றான். மகோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். இங்கே விநாயகப்பெருமான் அநியாயங்களையும், அக்கிரமங்களையும், அநீதியையும், அழித்தொழித்துக் குறைதீர்த்துக் களைபோக்கி மக்கள் மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கு வழிசமைத்துத் திருவருள் புரிகின்றான்.

வருடாவருடம் வைகாசிப் பூரணையைத் தீர்த்தநாளாகக் கொண்டு முதல்நாள் ரதோற்சவம் நிகழும். ஆலயத்தில் திருவிழா தொடங்கிவிட்டால் ஊரே விழாக்கோலம் பூண்டு தெய்வீகமாகக் காட்சியளிக்கும். புனிதமாக வந்து இனிய சேவடிகளைத் தொழுது நிற்கும் அடியார்கள் தமது பாவங்களையெல்லாம் நீறாக்கிப் பரமபதம் அருளவேண்டுமென்று அழுதுதொழுது நிற்கும் அருட்காட்சி ஆனந்தமயமானது.

சிவநெறிக் கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்**


## தேர்ச் சிறப்புமலர் அனுசரணையாளர்கள்:

விநாயகர் களஞ்சியம் & தொலைத்தொடர்பகம்
அளவெட்டி.

சத்தியநாதன் மில்
அளவெட்டி.

ரூபன் பல்பொருள் வாணிபம்
K.R. றேடர்ஸ் நிருமெடிக்கல்ஸ்
அளவெட்டி.

விநாயகர் தொலைத்தொடர்பகம்
அளவெட்டி. T.P.: 060 2212561

கஜமுகன் தொலைத்தொடர்பகம்
அழகுசாதனப் பொருள்கள் விற்பனை நிலையம்,
அளவெட்டி.
T.P.: 070 212517

பொன்மலர் தொலைத்தொடர்பகம்
அளவெட்டி.
T.P.: 0602 212558

பிள்ளையார் களஞ்சியம்
அளவெட்டி.

மிலேயன் சிகை அலங்கரிப்பு நிலையம்
அளவெட்டி.

நியூ சாந்தி சிகை அலங்கரிப்பாளர்
அளவெட்டி.

அப்புத்துரை களஞ்சியம்
அளவெட்டி.

சிவாய சிறீ சுப்பிரமணிய கலாசார நிலையமும் மகாஜன சபை சனசமூக நிலையமும்

விநாயகர் சைவ உணவகம்
அளவெட்டி.

விநாயகர் பந்தல் சேவை & தொலைத் தொடர்பு நிலையம்
T.P.: 021 222 5789
உரிமையாளர்: பீ.சசிக்குமார்

தினேஸ் அரைக்கும் ஆலை
அளவெட்டி.

K.K.முகுந்தன் சைக்கிள் வேக்ஸ்
அளவெட்டி.

நிலா உணவகமும் அன்பளிப்பகமும்
அளவெட்டி.

சீலன் பல்பொருள் வாணிபம்
அளவெட்டி.

நியூராதிகா மில்
அளவெட்டி.

தர்சன் களஞ்சியம்ஸ்
ஸ்ரேசன் றோட், ஏழாலை.

வளர்பிறை பல்பொருள் வாணிபம்
ரெட்பானா சந்தி, விசுவமடு.

சுகப்பிரதா தொலைத்தொடர்பகம்
அளவெட்டி.

புவனேஸ்வரன் பல்பொருள்வாணிபம்

மகோற்சவ காலக் கடைகள்
கச்சான், ஐஸ்கிறீம், இனிப்புக் கடைகள், தேநீர்க் கடைகள்.

விமல் போட்டோ & வீடியோ
கையடக்கத் தொலைபேசி உதிரிப்பாக விற்பனையாளர்
அளவெட்டி. T.P.: 077 6018803

'கூட்டுறவே நாட்டுயர்வு'
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்
அளவெட்டி.

'மக்களின் சேவையே மகத்தானது'
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்
தெல்லிப்பழை.

ரஜீவன் வைண்டிங் & மோட்டோர்ஸ்
K.K.S. வீதி, சுன்னாகம்.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நமணன் வீடியோ & ஒலி, ஒளி பேழைப் பதிவகம்

பரிசளிப்பு வெள்ளியன்று

# தீவகக் கல்வி வலய தடகள போட்டிகள் நாளை காவலூரில்

## சுவட்டு மைதான வீரர்களுக்கு 'உதயன்' கேடயங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

தீவகக் கல்வி வலயத்தின் வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நாளை மூன்றாம் திகதியும், நான்காம் திகதியும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு நிகழ்வில் தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 57 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. 'உதயன்' அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபால் தலைமை வகிக்கின்றார்.

வட-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

முதலாம் நாள் நிகழ்வில் 84 தடகளப் போட்டிகள் நடைபெறும் என்று உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் வலைப்பந்தாட்டம், கரபந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட், உடற்பயிற்சி, பட்மின்ரன், சதுரங்கம் ஆகியவற்றுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

சுவட்டு மைதான நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கும், பாடசாலைகளிற்கும் 'உதயன்' சுழல் கேடயங்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படும். (அ)

உதைபந்தாட்டப் போட்டிகளின் போது

# பாரிய குற்றங்களைப் புரியும் கழகங்கள் தடை செய்யப்படும்

## தமிழீழ விளையாட்டுத்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும் கழகங்கள் பாரதூரமான குற்றங்களைச் செய்தால் அக்கழகங்கள் உடனடியாகத் தடை செய்யப்படும். அத்துடன், தண்டப் பணமாக 25ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும்.

- இவ்வாறு தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவினர் அறிவித்திருக்கின்றனர்.

யாழ்மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட லீக் நிர்வாகிகளுக்கும், தமிழீழ விளையாட்டுத் துறையினருக்கும் இடையிலான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று கடந்த 30ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடத்தும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட உதைபந்தாட்டத்தின் வளர்சசி கருதி எடுக்கப்பட்ட மேலும் சில தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ சுற்றுப்போட்டியினை நடத்தும் கழகங்களால் சுற்றுப் போட்டியினை நடத்தும் மைதானம் சரியான முறையில் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு சரியாக ஒழுங்கமைப்புச் செய்யாதுவிடின் போட்டிக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

★ ஒரு கழகத்தில் இருந்து இன்னொரு கழகத்திற்கு அனுமதியின்றி விளையாடிய வீரர் ஒருவர் இனம் காணப்பட்டால், 6மாத காலம் அவ் வீரர் விளையாடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். அத்துடன், இவருக்கான குற்றப்பணமாக 2ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

★ பார்வையாளர்களின் செயற்பாடுகளைக் கழகங்கள் கட்டுப்படுதத வேண்டும்.

★ சுற்றுப் போட்டிகளில் தமிழீழ விளையாட்டுத் துறையின் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டன.(4-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை வருடாந்தம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தல் நடைபெறவுள்ளது.

லீக் முறையில் நடத்தப்படும் இச் சுற்றுப்போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், சென்றலைற் விளையாட்டுக்கழகம், யாழ். பல்கலைக்கழக வி.க. மற்றும் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. வி.க. ஆகியவற்றின் அணிகள் பங்குபற்றுகின்றன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ யாழ். பல்கலைக்கழக வி.க. எதிர் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. வி.க.

★ யங்ஸ்ரார் வி.க. எதிர் சென்றலைட் வி.க. (-5-190)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் 16 வயதுக்குட்பட்டோருக்கான அஸ்ரா வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி (கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்).

★ பெரியபுலம் ம.வி. எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (பெரியபுலம் மகாவித்தியாலய மைதானம்).

★ யூனியன் கல்லூரி எதிர் கனகரத்தினம் மகாவித்தியாலயம் (யூனியன் கல்லூரி மைதானம்).

★ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் பரியோவான் கல்லூரி (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மைதானம்).

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி (விக்ரோறியாக் கல்லூரி மைதானம்).

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்) (5-86-190)

✪ ✪ ✪

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணி முதல் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி - அம்பாள் வி.க. எதிர் சென்மேரிஸ் வி.க.

★ மாலை 4 மணி - சென் றோக்ஸ் வி.க. எதிர் கரணவாய் மத்திய வி.க. (5-190)

✪ ✪ ✪

தென்மராட்சி,ஜூன்2

கொடிகாமம் அன்னை திரேசா முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்வார். (4-117)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். வை.எம்.சீ.ஏயினால் நடத்தப்படும் நான்கு முன்பள்ளிகளுக்கிடையிலான வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (10-ரி)

# விளையாட்டு

# 10 நிமிட திடீர்ச் சோதனையில் 17 பேர் அபராதம் செலுத்தினர்

தென்மராட்சி,ஜூன்2

சாவகச்சேரி பொலீஸார் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சந்தியில் 10 நிமிடங்கள் மேற்கொண்ட திடீர் வீதிப் பரிசோத னையில் 17 மோட்டார்ச் சைக்கிளோட்டிகள் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக ஸ்தல அபராதத் (Sport Fine) தொகையினைச் செலுத்தினர்

தலைக்கவசம் அணியாமை, வாகனவரி, காப்புறுதி ஆகிய பத்திரங்கள் இல்லாமை போன்ற காரணங்களுக்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என்.அரியரத்ன தலைமையில் 50இற்கும் மேற்பட்ட பொலீஸார் இப்பணியில் ஈடுபட்டனர். (4-117)

# இறால் வளர்ப்பை ஊக்குவிக்க விரைவில் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். மாவட்டத்தில் இறால் வளர்ப்பு ஊக்குவிப்பாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் கலாநிதி கா.சித்திரவடிவேலு தெரிவித்துள்ளார்.

இறால் வளர்ப்புப் பண்ணைகளை உருவாக்கி, அவற்றின் மூலம் இறால் வளர்ப்பினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்பக் கட்டமாக பண்ணை இறால் வளர்ப்பு முறை பற்றியும், அதன்மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விளக்கம் அளிக்கும் வகையிலான் கருத்தரங்கொன்று யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடத்தப்பட்டதுடன் இறால் வளர்ப்பதற்கான இடங்களும் தெரிவுசெய்யப்பட்டன.

இதன் அடுத்த கட்டமாக, எமது பிரதேசத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் வகையில் இறால்வளர்ப்புப் பண்ணைகளை உருவாக்குவதறகு முதலீடு செய்வதில் ஆர்வமுள்ளவர்களை இணைத்து இறால் வளர்ப்பு ஊக்குவிப்பாளர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்யத் தீர்மானித்துளளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, இதில் ஆர்வமுள்ளவர்களை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (10-7-ரி)

# குடிதண்ணீர் விநியோகத்துக்கு 25 பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகள்

கொக்குவில்,ஜூன்2

வரட்சிக்கால குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்காக 25பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகள் உதவி அரச அதிபர் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்கு 11 தாங்கிகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்கு 6 தாங்கிகளும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபா பிரிவிற்கு 5 தாங்கிகளும் காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிற்கு 3 தாங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நீர்த்தாங்கிகளை வைப்பதற்கான இடங்கள் ஏற்கனவே பிரதேச செயலர்களினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (எ-76)

# ஜே.வி.பி. எம்.பியின் நடத்தையால் அரசவைத்தியர்கள் சங்கம் சீற்றம்

கொழும்பு,ஜூன்2

வைத்திய அதிகாரி ஒருவரை தகாத வார்த்தைகளால் பேசி, தாக்குவதற்கும் முற்பட்டார் என்று கூறப்படும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிடில் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் கந்தளாய்க் கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கந்தளாயில் டெங்குக் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான இயக்கம் ஒன்றின்போது நகரில் உள்ள பல கடைகளை மூடிவிட உத்தரவிடும்படி குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வற்புறுத்தியதாகவும் அவ்வாறு கடைகள் மூடப்படுவதற்கு பிரதேச சபையின் அனுமதிபெற வேண்டும் என்று கூறியபோதே அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரியையும் பொது சுகாதாரப் பரிசோதகரையும் அவர் தகாத வார்த்தைகளால் பேசி தாக்க முற்பட்டதாகக் கந்தளாய் ஆதார வைத்தியசாலை அதிகாரி ஒருவர் கூறினார்.

சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:-

கந்தளாயில் டெங்குக் காய்ச்சல் பரவாமல் தடுக்கும் இயக்கம் ஒன்றை நடத்தக் குறிப்பிட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விரும்பியுள்ளார். அதற்காக கந்தளாய சுகாதார வைத்திய அதிகாரியின் ஒத்துழைப்பையும் கோரியிருந்தார். இந்நிகழ்ச்சி 22ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனவே, 21ஆம் திகதி இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஆனால், அந்த நாடாளுமன்ற உறுப்பினர் நடந்துகொண்ட விதமும், பேசிய முறையும் அதில் கலந்துகொண்ட வைத்திய அதிகாரிகளுக்கு வெறுப்பைத் தருவதாக இருந்தது. அவருடன் சேர்ந்து தொடர்ந்தும் செயலாற்ற முடியாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஆலோசனையில் கலந்து கொண்டவர்களுடன் மரியாதையாகப் பேசக்கூட அவரால் முடியவில்லை என்று கூறப்படுகின்றது. (ப)

## சமுர்த்தி வங்கி அலுவலகம் திறப்பு

தென்மராட்சி,ஜூன்2

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கிகளின் மகா சங்க அலுவலகம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கிகளின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆ.ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அலுவலகக் கட்டடத்தினை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

அலுவலக பெயர்ப் பலகையை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.குணாளசிங்கம் திறந்து வைத்தார்.

நிகழ்வில் வரவேற்புரையினை பிரதேச சமுர்த்தி மகா சங்கத் தலைவர் வே.சின்னத்தம்பியும் ஆசியுரையை தென்னிந்திய திருச்சபை போதகர் ஜே.வசந்தகுமார் அடிகளும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் ஜே.கில்பேட் குணம், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம், மக்கள் வங்கி முகாமையாளர் க.சிவபாலன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் உட்படப் பலர் உரையாற்றினர். (4-[illegible])

# புலிகளின் தன்னாட்சி கோரிக்கை மீது சபையில் விவாதிக்கவேண்டுமாம்

கொழும்பு,ஜூன்2

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி நிர்வாக அமைப்புத் தொடர்பான விவாதம் ஒன்றுக்கு நாடாளுமன்றத்தில் நேரம் ஒதுக்கும்படி ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் அத்துருவியே ரத்ன தேரோ கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறக்கூடிய பேச்சுக்களின் போது புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் அடிப்படையாக அமைய வேண்டும் என்ற கோரிக்கையைப் புலிகள் வற்புறுத்துவதால் அதன் மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய தலைவர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக, அடுத்துவரும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பதிலளிக்க அரசு தீர்மானித்துள்ளது. (ப)

# உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2003ஆம் ஆண்டுக்கான நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ளது.

[illegible] வருடம் நடைபெறாத மேற்படி பரீட்சை எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறுமெனவும் அதற்குரிய அனுமதி அட்டைகளை அலுவலகத்தில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளலாம் எனவும் நிறுவன இயக்குநர் த.இராசரட்ணம் தெரிவித்துள்ளார். (10-ரி)

இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை

ஸ்ரீசோட்டாநிக்கரை பகவதி அம்மன் அருள் பெற்ற ஸ்ரீ வெட்காளி அம்மாவின் அருந்தவப் புதல்வன்



**மணிசாமி** அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**N.A.**லொட்ஜ், றூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி, (ராஜா தியேட்டர் அருகில்) 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை)

(32663)(11-16-37)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 11 - 1948 | 03 - 05 - 2004 |



## வலத்தீஸ் பாக்கியநாதன்

(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

*வெளிநாடு நாம் செல்ல சிரித்துக் கதைபேசி வழியனுப்பி வைத்தீர்! அந்த இனிய முகத்தை இனி என்று காண்போம்.*

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

இராஜரட்ணம் குடும்பம் (கனடா)
நிர்மலா குடும்பம் (கனடா)
நிர்மலதாசன் குடும்பம் (கனடா)
விமலதாசன் குடும்பம் (கனடா)
சந்திரிகா குடும்பம் (கனடா)
கீதா குடும்பம் (கனடா)
றஜிதா குடும்பம் (லண்டன்)
நீரா, அசோக் (கனடா)
சைலஜா குடும்பம் (கனடா)

(32657)(11-16-37)

## பொதுசன உதவிப்பணம்

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப்பணக் கொடுப்பனவு வழங்குமாறு கேட்டுக் கடந்த ஆண்டில் விண்ணப்பம் செய்திருந்த 125 பேருக்கு கடந்த மே மாதம் முதல் கொடுப்பனவை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மே மாதத்திற்கான பட்டியலில் இவர்களுக்கான கொடுப்பனவு இவர்கள் வசிக்கும் பிரிவிலுள்ள தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (4-135)

## அதிபரைத் தாக்கிய ஆசிரியை!

ஆசிரியையொருவர் தனது பாடசாலை அதிபரைத் தாக்கிய சம்பவம் ஒன்று கலகெதர பொலீஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது. கலதெரப் பிரதேசத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலையொன்றின் அதிபருக்கும், அங்கு கல்வி கற்பித்து வரும் ஆசிரியையொருவருக்கும் நீண்ட காலமாகச் சச்சரவுகள் ஏற்பட்டு வந்துள்ளன.

இதனால் இவர்களைச் சமாதானப் படுத்தும் நோக்கில் கலகெதர பொலீஸ் நிலையத்துக்கு இவர்கள் அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

அவ்விசாரணை முடிந்து திரும்பி வரும் வழியாலே பிரஸ்தாப பெண் அந்த அதிபரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த அதிபர் தற்போது சிகிச்சைக்காக கலகெதர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (10-ரி)


# காப்புறுதி ஆலோசகர் பதவி வெற்றிடம்

பிரபல்யமான காப்புறுதிக் கம்பனி ஒன்றிற்கு காப்புறுதி ஆலோசகர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கா.பொ.த. (சாதாரணம்) கணித பாடம் உட்பட ஆறு பாடத்தில் சித்தி.

★கவர்ச்சிகரமான தரகுப் பணத்துடன் மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

★கம்பனியால் வழங்கப்படும் இதர சலுகைகளுக்கும் உரித்துடையவராவார்.

★விண்ணப்ப முடிவு திகதி 07.06.2004

விண்ணப்ப முகவரி
விள.இல. 2284,
மே/பா உதயன் பணிமனை.

(32653)(38-11-16-37)


# துயர் பகிர்கின்றோம்

யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் பேரனும் இக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்கள் திரு.திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் தற்போதைய விஞ்ஞான ஆசிரியை செல்வி இராசஇராசேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புச் சகோதரருமான

## பாலசுப்பிரமணியம் சிவசங்கரபண்டிதர்

(பண்டிதர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, துயரை நாமும் பகிர்ந்து கொண்டு அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்,
யா/அத்தியார் இந்துக் கல்லூரி,நீர்வேலி.

(32641)(42-11-16-37)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோகரன் வசந்திராதேவி



யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் வசந்திராதேவி அவர்கள் 31-05-2004 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் அப்புத்துரை (அமரர்)- கமலாட்சி (இந்தியா) தம்பதிகளின் அன்பு மகளும் திருமதி கனகையா நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மனோகரனின் (ஜேர்மனி) அன்பு மனைவியும், ஜெனிஸ்ரனின் (ஜேர்மனி) அன்புத் தாயாரும், மல்லிகாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வைத்தீஸ்வராக்கல்லூரி), இரட்ணசிங்கம் (சுவிஸ்), ஜெயக்குமார் (லண்டன்), சுலோஜனாதேவி (இந்தியா), கருணாதேவி (ஜேர்மனி), சிவலிங்கம் (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (லண்டன்), சத்தியசீலன் (லண்டன்), விக்னராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), சூரியகலா(இந்தியா), யசோதரா (லண்டன்), யோகராஜா (இந்தியா), புஸ்பராஜா (ஜேர்மனி), மொனிக்கா (ஜேர்மனி), சுகைலா (லண்டன்), சுகந்தி (லண்டன்), கேமா (லண்டன்), இராஜேஸ்வரன் (கொழும்பு), பரமேஸ்வரன், விக்னேஸ்வரன், சிறிதரன், இந்திராணி (யாழ்ப்பாணம்), தங்கராணி (கனடா), ஜெயராணி (ஜேர்மனி), பிரேமராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் சி.பானுரேகாவின்(மாணவி, யா/வேம்படி மகளிர்கல்லூரி) அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜேர்மனியில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சி.சிவசுப்பிரமணியம்(மைத்துனர்)
சி. மல்லிகாதேவி
(ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ்/
வைத்தீஸ்வராக்கல்லூரி
இல.06, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.222 5386

(32652)(37-11-16)

## பிரம்மஸ்ரீ ஐயாத்துரைக்குருக்கள் வேதக்குட்டிக்குருக்கள்

பருத்தித்துறை, தென்புலோலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் வேதக்குட்டிக் குருக்கள் 31.05.2004 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதி அம்மாவின் அருமைக் கணவரும் பாலசுப்பிரமணியக் குருக்கள், விஸ்வநாதக் குருக்கள், காலஞ்சென்ற சுப்புலட்சுமி, திருமதி அருணாசலஐயர், ஜெயலட்சுமி, மீனாட்சியம்மா, காலஞ்சென்ற இன்பநாதசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2004) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னத்தாய்ப் பிள்ளையார் கோயிலடி,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
யோ.நாகேஸ்வர சர்மா
*(பேறாமகன்)*

(32656)(11-16-37)

Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6225992 முதல் 6237326 வரை

சீட்டிழுப்பு இல. 37 திகதி 31-05-2004

வெற்றி எண்கள் **7 4 2 5 0 8** சுப்பர் எண் **3**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,04,82,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,04,82,725/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 5,000/- | 5,10,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,014 | 500/- | 5,07,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,123 | 50/- | 5,06,150/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,00,312 | 10/- | 10,03,120/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 1,000/- | 1,02,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,010 | 100/- | 1,01,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,043 | 20/- | 2,00,860/- |
| மொத்தம் | 1,22,728 | | 54,35,130/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 54,35,130/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. **2,07,64,200/-**

தொடர் இல. 7203408 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூன 3 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**6233357-2-35**
**6228608-6-55**
**6231576-9-67**
**6228021-0-94**
**6226108-6-41**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


அனைத்தையும் முந்திக்கொண்டு தள்ளுபடி விலைகளில்

DVS **D.V.S மோட்டார் சைக்கிள்கள்!** DVS

யாழ்.நகருக்கான அதிகாரம் பெற்ற முகவர்கள்

**A.V.R மோட்டோஸ்**





கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள்களுக்கும் கெல்மட், ஜக்கெட் இலவசம்

காட்சியகம் : **100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**Mobile No. : 0777-238388**

(32482) (28-17)

# கண்ணீர்க் காணிக்கை

02.05.2004 அன்று எமது அன்புக்குரிய
**செல்வி நடராஜா கல்யாணி** அவர்கள் இயற்கையெய்தினார்.
அவருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துகின்றோம்.



மண்ணை விட்டு விண் சென்று
மாதம் ஒன்று கடந்ததே!
இதயத்தில் உன் நினைவு
தணலாய்த் தகிக்க இங்கு
ஈன்றவள் புலம்புகின்றாள் தவித்து.
கல்ரஞ்சனுடன் ஏனைய உடன் பிறந்தோரும்
கலங்கியே அழுது கண்ணீர் விட்டு நிற்க
எம்மை எல்லாம் விட்டு விட்டு
விண்ணுலகந்தான் சென்றது ஏனோ?


உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பருத்தித்துறை வீதி.
ஆவரங்கால் (32643)(13-33)

துயருடன் நினைவு கூரும்
**சிவா அரைக்கும் ஆலை.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 03 - 04 - 1923



மறைவு 05 - 05 - 2004

## அமரர் முத்துக்கிருஸ்ணர் கோபாலபிள்ளை

திதி:02-06-2004

பண்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!!
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே - ஐயா!
பாசத்துடன் எம்மை வளர்த்த ஐயாவே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து முப்பத்தொன்றாகிவிட்டது
நம்ப முடியவில்லை எங்களால் ஒவ்வொரு நொடியும்
உங்கள் நினைவுடன் நாம் வாழ்கின்றோம் ஐயா!

எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02-06-2004) புதன்கிழமை சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் 04-06-2004 வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெற உள்ளதால் இந்நிகழ்வுகளில் கலந்து எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்று நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.* (32622)(13-33-42)

பிரிவால் துயருறும்.
**அன்னாரின் குடும்பத்தினர்.**

# பதினோராவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 01 1954



இறப்பு 07 06 1993

## திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி

(அம்பன்- குடத்தனை)

*பதினோராண்டுகள் ஆனாலும் எம் துயரம் ஆறவில்லை*
*அன்புக்கும் பண்புக்கும் ஆதரவாய் இருந்தீர்கள்!*
*விருட்சமாய் விழுதுவிட்டு வேராக இருந்தீர்கள்!*
*நீங்கள் இல்லாத இல்லம் இங்கு தவிக்கின்றதே*
*உடம்பு மறைந்தாலும் உங்கள் நினைவு மறையாது!*

ராஜன் ஹாட்வெயர்ஸ்,
பருத்தித்துறை.
மு.நகுலராஜா,
நகுலேஸ்வரி தொலைத்தொடர்பகம்,
அம்பன் . குடத்தனை.
T.P: 060 2213002 (32646)(13-33-38)

-குடும்பத்தினர்.

# மின்விளக்கு இல்லை; பயணிகள் சிரமம்!

யாழ்ப்பாணம்,ஜூன்2

உரும்பிராய்ச் சந்திப்பகுதியில் வீதியோர மின்விளக்கு பொருத்தப் படாததினால் இரவு வேளைகளில் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இச்சந்தியில் முன்பு இருந்த மின்விளக்கு இராணுவத்தினரின் காவலரண் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அகற்றப்பட்டதாகவும், தற்போது இந்த இராணுவக் காவலரண் அகற்றப்பட்டுள்ள நிலையிலும் இதுவரை மின் விளக்குப் பொருத்தப்படவில்லை எனவும் பயணிகள் கவலை தெரிவித்தனர். (4-ரி)

# தொடருறு கல்விக் கருத்தரங்கு

வலி.தெற்கு,ஜூன்2

தொடருறு கல்விக் கருத்தரங்குத் தொடரில் குணநல உள்ளீடுகள் தொடர்பான கருத்தரங்கு உடுவில் கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை வியாழக் கிழமை மானிப்பாய் ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை, உடுவில் அ.மி.த.க. பாடசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த குணநல உள்ளீட்டுச் செயற்பாட்டுக்குப் பொறுப்பானவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வை.சச்சிதானந்தம், யாழ்ப்பாணம் ஆசிரிய வளநிலைய முகாமையாளர் சி.ரவீந்திரன் ஆகியோர் இக்கருத்தரங்கின் ஆளணியினராக கடமையாற்றுவர். (10-52)

# முன்பள்ளி ஆசிரியருக்கு பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் போரவையின் ஆதரவில் கோப்பாய்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகள் எதிர்வரும 6ஆம், 13ஆம், 20ஆம் திகதிகளில் காலை 9மணியிலிருந்து பிற்பகல் 4மணிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.(4-ரி)

# ஜி.சீ.ஈ. பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சையில் பாடசாலை ஊடாகத் தோற்றுபவர்கள் பாடசாலை அதிபர்மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கின்றபோது ஒருபாடத்திற்கான கட்டணமாக 25ரூபாவும், 2 பாடத்திற்கு 30 ரூபாவும், 3பாடத்திற்கு 35 ரூபாவும், 4பாடத்திற்கு 40ரூபாவும், 5பாடத்திற்கு 55ரூபாவும், 6முதல் 10பாடம் வரையில் 70 ரூபாவும் கட்டணமாகச் செலுத்தி தபாலகங்களூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூன்2

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரின் 80 ஆவது தொடர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"ஞானக்குழந்தையின் சமய வாழ்வு" என்ற தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசிதரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.


இன்றைய வெளியீடு
VCD SONG
♦ அருள்
♦ எதிரி
♦ ஜனா
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்.
(சி-35351)(13-33)



இன்னும் 3 நாட்களே உள்ளன !

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கரன
இலவச புலமைப்பரிசில் பரீட்சை
5-6-2004
ASIAN COMPUTERS
- 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் - K.K.S.வீதி,சுன்னாகம்.
- கோடிகாமம் ரோட், நெல்லியடி.



# Software Developer

வட அமெரிக்க ஐரோப்பிய நாட்டு நிறுவனங்களில் தனது தயாரிப்பினை (Tailor Made Software) நிறுவிவரும் ஐரோப்பிய நாட்டு நிறுவனமான EuroSoft தனது செயற்பாடுகளை இலங்கையிலும் விஸ்தரித்துள்ளது. இச்செயற்பாடானது பின்வரும் நிலைகளை உள்ளடக்குகின்றது.

**01) தேர்வு:** தகுதியுள்ளவர்களுக்கான தேர்வு
18 தொடக்கம் 24 வயதிற்கு உட்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம். இவ்விண்ணப்பதாரிகள் தகுதிகாண் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

**02) பயிற்சி:** தகுதிக்கேற்ற பயிற்சி
தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வி தராதரத்திற்கு ஏற்ப நிறுவனத்தின் முழு அல்லது பகுதி அனுசரணையுடன் தலைநகரில் சிறந்த கல்வி நிறுவனங்களில் கணனி/ஆங்கில முழு நேரப்பயிற்சி நெறிகளுக்கு உட்படுத்தப்படுவர். (Full/ Partial Scholarship by the Company)

**03) தொழில்:** தரப்படுத்தப்பட்ட மென்பொருள் தயாரிப்பு புலமையுள்ள அல்லது கல்வி கற்றலில் புலமையை வெளிப்படுத்தும் மாணவர்கட்கு உடனடியாக நிறுவனத்தினால் தொழில் வாய்ப்பு வழங்கப்படும். (Software Developer - Salary from SL Rs.10,000/= to 30,000/=)

**04) புரழ்வு :** வடஅமெரிக்க/ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்துநர்.
தயாரிப்பில் துரிதம், திறன்ம, தராதரம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் மென்பொருள் வரைஞர்கள் (High Skilled Software Developers) நிறுவனம்சார் வியாபார செயற்பாட்டு ஆராய்ச்சி அபிவிருத்திக்காகவும் மேல்நிலை சந்தைப்படுத்தலிற்காகவும் (Onsite Business System Study/Development & Further Marketing) வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

செயற்திட்டங்களில் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ் விவரிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய சுயவிவரக்கோவையினை சொந்தக் கையெழுத்தில் எழுதி, எமது நிறுவனமாகிய British InfoTech இன் பெயரிலானதும் ஹவ்லொக் ரவுன் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதுமான ரூபா 540/- பெறுமதியான காசுக்கட்டளையுடன் (Money order addressed to Havelock Town Post Office, Colombo 05) பதிவுத்தபாலில் 18 June 2004ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்ட எமது முகவரிக்கு அனுப்பி கணனிமயப்படுத்தும் விண்ணப்பப்படிவம், தகுதிகாண்பரீட்சைக்கான அனுமதி ஆகியவற்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

நிராகரிக்கப்படும் சுயவிவரக்கோவைகள் அனைத்தும் மீள் காசுக்கட்டளையுடன் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

## சுயவிவரக் கோவையின் உள்ளடக்கம்:

1. முழுப்பெயர்:
2. பிறந்ததிகதி:
3. பால்:
4. கல்வி:
5. தொழில்:
6. வேறு:
7. விலாசம்:
8. தொலைபேசி இல.:
9. அடையாள அட்டை இலக்கம் (இருப்பின்):
10. அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதி:

எமது முகவரி:
**British Info Tech,**
**399/3, Galle Road,**
**Colombo 04.**
தொலைபேசி இல. (011) 533 7000
0777 310187
(C/35334)(13-33-42)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

1ஸ்ரீ xxx 1000 மொடல் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மா.சிவராசா, வியாபாரி மூலை, பருத்தித்துறை. (32474)

தரமான Prima Broiler மற்றும் பேட்டுகுஞ்சுகள் 07.06.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm, வட்டுக் கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டி பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(32515)

Nokia 3010, நல்ல நிலையிலுள்ள கைத் தொலைபேசி (Hand Phone) விற்பனைக்குண்டு. தொடர்பு: 407, பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி. T.P.: 2225840. (32595)

நம்பர்1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறிமா இன சிவப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் 04.06.2004 மாலை விநியோகிக்கப் படும். பதிவுகளை முன்கூட்டியே மேற் கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.T.P.2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32593)

நல்ல நிலையிலும், மலிவு விலை யிலும் Distar 14" கலர் T.V விற்பனைக்குண்டு. தொடர்பு: அனுராஜ் (அனு), சேச் லேன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (32635)

பாவித்த மொபிட்டல் மேசைத் தொலைபேசி (காட்லைன்) அன்ரெனா வுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6673. (32619)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்2

நல்லூர் பிரதேசத்துக்குட்பட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன் பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கண காட்சி நடத்துவது தொடர்பாகவும், விசேட திட்டங்கள் பற்றியும் ஆராயப் படவுள்ளதால் நல்லூர் பிரதேசத்துக் குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோக ராசா கேட்டுள்ளார். (4-ரி)

### சிறுவர் அரங்க நாடகம்

வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கோட்டமட்ட சிறுவர் அரங்க நாடகம் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

1ஏபி, 1சி மற்றும் தரம் 2 பாட சாலைகளுக்கு தனிப்பிரிவாகவும், தரம் III பாடசாலைகளுக்கு தனிப் பிரிவாகவும் சிறுவர் அரங்கம் நடை பெறும். இவ்விரு பிரிவுகளில் இருந் தும் தெரிவாகும் நாடகம் வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நாடகங்களில் நடித்த அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

வலய மட்டத்திலான சிறுவர் அரங் கப் போட்டிகள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (10-152)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 20 - 06 - 1966

மறைவு 02 - 05 - 2004

### அமரர் செல்வி ந.கல்யாணி

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்ற எம் குலவிளக்கே!
நாள்கள் ஆயிரம் ஓடினும்
உம் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (02-6-2004) புதன்கிழமை முற்பகலில் நடைபெறுகின்றது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்வதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு.

(32494)(42-12-38-21)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 4ஆவது ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 23 07 1940

விண்ணில் 17 05 2000

### அமரர் சபாபதி திருநாவுக்கரசு

(முன்னாள் அதிபர் - யா/சாதனா சி.சி.த.க.பாடசாலை,
யா/கலட்டி மெ.மி.த.க.வித்தியாலயம்)

திதி :- 02.06.2004

குடும்ப தலைவராய், மணவரன்
கலங்கரைவிளக்காய்
மண்ணுலகில் வாழ்ந்து நீங்கள் மறைந்து
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் உள்ளங்களில் இருக்கும் தெய்வம் ஐயா!

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மகள், மருமகன்,
பேரன், அண்ணன்,
பெறாமக்கள்.

1/5, மடம் வீதி.
யாழ்ப்பாணம்.

(32636)

## பதவி வெற்றிடம்

..ட் காப்புறு.. கூட்டுத்தாபனம் (இலங்கை)வரை.
இ.. புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு
காப்புறு.. முகவர்கள் தேவை

கல்வித் தகைமைகள்: க.பொ.த. சாதாரண தரம் (கணிதம் முக்கியம்)
க.பொ.த. உயர்தரம்

வயதெல்லை: 18- 55 வரை

வேறு காப்புறுதி .. ..ங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங் களில் வேலைசெ.. .. நேரமாக இணைந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆண்,பெண .. ..பாலாரும் 02.06.2004இல் இருந்து ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் கீழ் உள்ள முகவரிக்கு நேர்காணலுக்காகச் சமுகம் தரலாம்.

**ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம்(இலங்கை)வரை.**
55, R.G. கட்டடம், கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 6325, 6326

(32648) (21-35-12-38)

## நீங்காத நினைவில் 14ஆம் ஆண்டு



வையத்துள் அறிமுகம் 26 - 03 - 1964

தெய்வத்துள் சங்கமம் 07 - 06 - 1990

### செல்வி நர்மதா கனகரட்ணராஜா

(நடன ஆசிரியை,மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

திதி: 02-06-2004


எங்கள் அன்பின் திருவுருவே
ஆசையின் மணிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் ஒளி விளக்கே! எம்மை எல்லாம்
ஆறாத் துயரில் விட்டுவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புச் செல்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும் அம்மா
என்று சொல்ல உன் உயிர் இல்லையம்மா! ஆண்டுகள்
பதின்னான்கு சென்றாலும் உன் நினைவு
எங்கள் நெஞ்சைவிட்டகலாதம்மா

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, மாமன்மார், மாமிமார்,சித்தப்பா,
சித்திமார், தம்பிமார், தங்கைமார்.

சந்தையடி,
மானிப்பாய்.

(32612)(42)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 24 - 10 - 1939

மறைவு 04 - 05 - 2004

அமரர்

### அருணாசலம் தருமலிங்கம்

(இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் இளைப்பாறிய லிகிதர், திருகோணமலை)

எல்லாம் எமக்காகி ஏற்ற
கணவராய் தந்தையாய்
நல்லிதயத்தால் யாவரிலும்
சொல்லரிய பாசம் கொண்டிருந்தீர்!
அல்லும் பகலும் பக்திப் பெருக்கில்
எல்லார் நலம் வேண்டி நின்றீர்!

நாளை (03. 06. 2004) வியாழக்கிழமை அன்னாரின் சகோதரி யின் இல்லத்தில் (வல்வெட்டித்துறை) நடைபெறவுள்ள அந்தி யேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உற வினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறாம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை

(32584)(38-21-12-38)

## நினைவஞ்சலி

02.06.2004

9ஆம் வருடம்



பிறப்பு 10 - 10 - 1916

இறப்பு 15 - 06 - 1995

### நாகமணி முத்துச்சாமி (திருமேனி)

திதி: திருத்திகை

அன்பு நிறைந்த ஐயா
9ஆண்டு ஓடி மறைந்து
ஒருகணமும் மறையவில்லை
உங்கள் முகம் அன்பு, கடமை,
கண்ணியம், கட்டுப்பாடு என்று வளர்த்த
உங்கள் முதல் குஞ்சையும்
கூப்பிட்டு அழைக்க
எப்படி ஐயா மனம் வந்தது

முதலாம் வருடம



பிறப்பு 23 - 03 - 1923

இறப்பு 14 - 06 - 2003

### முத்துச்சாமி சோதியம்மா (சோதி)

திதி: பூரணை

எங்கள் அன்பான அம்மா
ஆண்டு ஒன்று ஆனதம்மா
மறையவில்லை உங்கள்
சோதிமுகம்
கண்மூடி முழிக்கமுன்
உங்கள் முதல் முத்தையும்
ஏனம்மா உங்களுடன்
அழைத்தீர்கள்

துடிக்கின்றோம் துணையிழந்து
தவிக்கின்றோம்.

குடும்பத்தினர்.

விதானையார் வீதி.
சுண்டுக்குழி. யாழ்ப்பாணம். (சி-35338)

# சர்வதேச உதவி பெறுவதில் காட்டும் ஆர்வம் சமாதான விடயத்தில் அரசுக்கு இல்லை

## உலக வங்கிக்குழுவிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு



கிளிநொச்சி,ஜூன்2

சர்வதேச சமூகத்தின் நன்கொடைகளையும் நிதி உதவிகளையும் பெறுவதில் காட்டும் ஆர்வத்தை - கரிசனையை - அரசு சமாதான முன்னெடுப்புககளில் காட்டவில்லை. மாறாக காலதாமதத்தையே ஏற்படுத்தி வருகின்றது. இந்தச செய்தியை சர்வதேச சமூகத்துக்கு நாம் விடுத்துள்ளோம்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று முற்பகல வருகைதந்த உலக வங்கியின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தலைமையிலான குழுவினருடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் பேச்சு நடத்தினார். அதன் பின்பே மேற்கண்டவாறு ஊடகவியலாளர்களிடம அவர் தெரிவித்தார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வம் காட்டுவதை அரசு தவிர்த்து வருகின்றது. சர்வதேச சமூகத்திடம் இருந்து நிதி உதவிகளை, நனகொடைகளைப் பெறுவதில் காட்டும் ஆர்வத்தையும் கரிசனையையும் சமாதான முன்னெடுப்புக்களில் அரசு காட்டவில்லை. காலதாமதத்தை ஏற்படுத்தி வருகின்றது. இந்த விடயத்தை - செய்தியை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு நாங்கள் கொண்டுவந்துள்ளோம்.

இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேசி தீர்க்கமான முடிவு காணவேண்டும் என்பது எமது மக்களின் விருப்பமும், ஆணையுமாகும். தமது வாழ்வியல் தேவைகளைப் பூர்த்திசெய்ய இடைக்கால நிர்வாக சபை அமையவேண்டும் என்ற எமது மக்களின் நிலைப்பாட்டை உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கு விளக்கிக்கூறினோம்.

கடந்த இரண்டரை வருடமாகத் தொடரும் சமாதான முன்னெடுப்புக்களால எமது மக்கள் எந்தவித நன்மையையும் அடையவில்லை. இதனால், இந்தச் சமாதான முன்னெடுப்புக்களில மக்கள் நம்பிக்கையின்மை அடைந்துள்ளனர்.

மக்களின் நம்பிக்கையீனத்தை நிவர்த்தி செய்யவேண்டுமானால், இடைக்கால நிர்வாக சபை உடனடியாக உருவாக்கப்படவேண்டும். அந்தச் சபை ஊடாக சர்வதேச உதவிகளைப் பெற்று மக்களின் மறு வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடங்கப்படவேண்டும் இதுவே எமது மக்களின் எதிர்பார்ப்பு என உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் விளக்கிக் கூறினோம்.

வடக்கு - கிழக்குக்கான புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் என்று கூறிக் கொண்டு இலங்கை அரசு பல புதிய கட்டமைப்புக்களை உருவாக்கி வருகினறது. ஒருதலைப்பட்சமான செயற்பாடாகவே அது உள்ளது.

இத்தகைய அமைப்புக்களை நமது மக்களோ விடுதலைப் புலிகளோ ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற யதார்த்தத்தையும அவர்களுக்கு விளக்கிக்கூறினோம.

இலங்கைக்கு சர்வதேச சமூகம் வழங்கும் நிதி உதவிகள் தமிழர் தாயகத்துக்கும பகிரப்படவேண்டும். வடக்கு - கிழக்கில் வலுவான கட்டமைப்பு உருவாக்கப்படாமல், சர்வதேச சமூகம் நிதியுதவியை வழங்குமாயின் அது நிச்சயமாக தமிழ் மக்களுக்கு பலனளிக்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டையும் அவர்களுக்கு விளக்கிக் கூறியுள்ளோம் - என்றார் அவர். (அ-3)


## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் இன்று (02.06.2004) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 10 மணிக்கிடையில் வரும் சுப முகூர்த்த நல்வேளையில்

### இணுவில் மருதனார்மடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம்

ஒன்றை பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் அவர்களால் வைபவரீதியாகத் திறந்துவைக்க இறைவன் திருவருள் கைகூடியுள்ளது.

ஆகவே அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் வருகைதந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- திரு.க.பொ.சண்முகநாதன். உரிமையாளர்.

மருதனார்மடச்சந்தி. (32638)(36-11-16)


## ஒன்பதாவது வருட நினைவுகளுடன்...



வீரமண்ணில 06 02 1974

வீரமண்ணுக்காய் 02 06 1995

### வீரவேங்கை நீலகண்டன்

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)


வீர மண்ணிலே பிறந்து வீரத்துடனே வாழ்ந்து
வீர மக்களிற்காக வீரத்துடனே போராடி
வீர காவியமான எம் வீரனே

என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் இலட்சியப்பாதையில்..

K.கண்ணன் (சகோதரன்)

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (32664)(37-11-16)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



19-04-2004இல் அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வம்

### துரைராசா சாருஜனின்

(யாழ்/இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

45ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்தியமும் எமதில்லத்தில் இன்று (02-06-2004) புதன்கிழமை நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

துரைராசா குடும்பம
(கிராம அலுவலர், பிரதேச செயலகம்,கோப்பாய்),
கார்த்திகாயினி (சகோதரி),
தனுசன் (சகோதரன்).

இராச வீதி,
தோப்பு அச்சுவேலி. (32634)(42-11-16)

## ஒப்படைத்துதவவும

நேற்று (01. 06. 2004) செவ்வாய்க் கிழமை முகமாலைச் சோதனைச் சாவடியில் கறுப்புநிற பை (BAG) (உடுபுடைவைகள் அடங்கியது) கை மாறி எடுத்துச்செல்லப்பட்டு விட் டது.

எடுத்துச்சென்றவர்கள் தயவு செய்து கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

K.R.K.தொலைத்தொடர்பகம்,
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.
T.P.0777-062381 (32660)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



லண்டன் மாநகரில் அகாலமரணமடைந்த

### செல்வன் பாலசிங்கம் பார்த்தீபன்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11-04-1980 | 13-06-2003 |

அன்பின் உறைவிடமே! எங்கள் ஆரமுதே!!
அந்நிய தேசமதாம் லண்டன் மாநகரில்
வஞ்சகர் சூழ்ச்சியால் வதனந்தான்
வாடாமல் வானுலகு சென்றாயோ?
வருஷமொன்றானாலும் வருந்துகின்றோம்
நின் நினைவால் என்றென்றும்
உயிரால் பிரிந்தாலும் உள்ளத்தால் பிரியாத
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- வ.பாலசிங்கம் குடும்பத்தினா.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (32647)(32)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி துரையப்பா முத்துப்பிள்ளை



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வேதாம்சத்தின் அன்பு மகள் துரையப்பா முத்துப்பிள்ளை நேற்று (01.06.2004) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.06.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00மணிக்கு தகனக்கிரியைககாக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் கிழக்கு,
சிவன்கோவிலடி, இணுவில்.(32666)(43-11-16)

தகவல் :
குடும்பத்தினா .

## பொன்னையா செல்லையா



முன்னாள் முகாமையாளர், கதிரிப்பாய் ப.நோ.கூ. சங்கம், தலைவர், பத்தமேனி - இடைக்காடு சமாதான சபை, உறுப்பினர், அச்சுவேலி கிராமசபை)

அச்சுவேலியைச் சேர்ந்தவரும் யாழ்.நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லையா அவர்கள் நேற்று (01.06.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் இரத்தினம்மாவின் அன்புச் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை (திருமலை) மற்றும் கந்தையா (முன்னாள் சுகாதாரப் பரிசோதகர்-மலேஷியா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் திருமதி கமலாஜினி (முன்னாள் அலுவலர், காப்புறுதிக்கூட்டுத்தாபனம்), செபத்மாவதி, கெங்காதேவி, பாலச்சந்திரன் (ஆசிரியர், யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.), பாலசுந்தரம் (சுவிஸ்), நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் துரைராஜா (லங்கா சிமெந்து லிமிட்டெட்), தியாகலிங்கம் (முன்னாள் அலுவலர், இ.போ.ச), சிவஞானம், லலிதகுமாரி, பிராங்க் கொய்ஸ் விக்னேஸ்வரன் (விக்னா ரீ) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.06.2004) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்நாச்சிமார்கோயிலடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

916,கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.பாலச்சந்திரன்(மகன்).
(32661)(11-16-36)

## இராமுப்பிள்ளை சுப்பையா

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)



மாதகல், குருக்கள் மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட இராமுப்பிள்ளை சுப்பையா அவர்கள் நேற்று (01.06.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற சிவபாக்கியதின் அன்புக் கணவரும் சரோஜினி தேவி, கமலாதேவி ஆகியோரின் பாசமிகு அப்பாவும் பாலசிங்கம் (உதவித் திட்டமிடற் பணிப்பாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கமலநாதனின் மாமனாரும் அருட்சோதி கோமளாதேவி, உமாராணி, குலேந்திரன், தயாபரி, சந்தியபாமா, நித்தியா, புஸ்பலீலா (ஆசிரியர், மாதகல் சென்.ஜோசப் கல்லூரி), வசீகரன்(கனடா), உருத்திரநாதன் ஆகியோரின் பேரனும் யசோதாவின பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.06.2004) புதன்கிழமை பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று, மாதகல் போதி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

குருக்கள் மடம், (32667)(36-11-16)
மாதகல்.

தகவல்:-
மருமகன் - பாலசிங்கம்.

## திருமதி தம்பையா பொன்னம்மா



மட்டுவில் தெற்கு, மருதங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும கொண்ட திருமதி தம்பையா பொன்னம்மா அவர்கள் நேற்று (1.6.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் இராசம்மா, பாக்கியம்(பவளம்-கனடா), காலஞ்சென்ற கதிரவேலு ஆகியோரின் அன்புத தாயாரும் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் சிறிய தாயாரும் கனகரத்தினம், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சாந்தம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2.6.2004)புதன்கிழமை இராமகிருஸ்ண வீதி,கொக்குவில் கிழக்கு,கொக்குவிலில் உள்ள இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.4.00 மணிக்கு கொக்கு வில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

இராமகிருஸ்ண வீதி,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

தகவல்:-
செல்வலிங்கம்(பேரன்).
(32668)(11-16-36)

## அரசின் திட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னையும் அடைந்துள்ளனர்.

மூத்த பத்திரிகையாளனை, தமிழ்த் தேசியத்துக்கு உயிர் கொடுத்து தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி உறுதியுடனும், துணிச்சலுடனும் குரல் கொடுத்த சிறந்த பத்திரிகையாளனை எங்கள் தேசம் இன்று இழந்து நிற்கின்றது. அவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அடாவடித்தனமான, மிக மோசமான இச்செயல் கண்டிக்கப்பட வேண்டியது. உண்மையில் இந்தக் கொலை திட்டமிடப்பட்ட ரீதியில் இலங்கை அரசினதும், படையினரினதும் ஆதரவுடன்தான் நடைபெற்றிருக்கின்றது.

தமிழ்த் தேசியத்தின் உயர்ச்சியையும், எழுச்சியையும் நசுக்கும் நோக்கோடு மட்டு-அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. அதன தொடர்ச்சியாகவே, நடேசன் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக எமது கடும் கண்டனத்தை நேர்வே தரப்புக்கும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் தெரிவித்துள்ளோம்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், படையினரின் மிகவும் கண்காணிப்புக்கு உட்பட்ட செறிவான முகாம்கள் அமைந்த பிரதேசத்தில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆகவே, இந்தப்படுகொலை நிச்சயமாக படைத்தரப்பின் ஆதரவோடுதான் நடந்திருக்கிறது.

இப்படியான கொலைகள் தொடரும் என்ற செய்தியை துண்டுப்பிரசுரங்கள் மூலம் இராணுவப்புலனாய்வுத் துறை சமீப நாள்களாக வெளியிட்டுள்ளது. இதனை வைத்துப்பார்க்கும் போது நிச்சயமாகப் படையினரின் ஆதரவு இந்தக் கொலையின் பின்னணியில் இருக்கின்றது என்பது புலனாகும்.

தேசத்துரோகி கருணாவையும் அவரோடு வெளியேறிய சில துரோகிகளையும் படைத்தரப்பு பாதுகாத்து வைத்திருக்கிறது. அது போலவே ஏனைய ஆயுதக்குழுக்களையும் அங்கே படைத்தரப்பு பாதுகாத்து வைத்திருக்கின்றது.

இத்தகையோர் ஆயுதங்களோடு மட்டக்களப்பு நகரில் நடமாடுகின்றனர் எனப்படைத்தரப்புக்கும், கண்காணிப்புக்குழுவுக்கும் தெரிவித்திருந்தோம்.

இவ்வளவு எச்சரிக்கையையும், அறிவுறுத்தல்களையும் நாம் படைத்தரப்புக்கும், கண்காணிப்புக் குழுவுக்கும் விடுத்திருந்த போதிலும் பாதுகாப்பை பலப்படுத்தாது இருந்ததையிட்டு கவலையடைகின்றோம்.

**பொறுமை பேண முடியாது**

இத்தகைய கொலைகளைத் தொடர்ச்சியாக பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இதனை எமது மக்களும் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே இவற்றுக் கெல்லாம் தீர்க்கமான முடிவுகள விரைவில் எடுக்கவேண்டும். அதுதான் எமது மக்களினதும் ஊடகவியலாளர்களினதும் எதிர்பார்ப்பாகும். இந்தக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் நிச்சயமாக அதற்கான விளைவுகளைச்சந்தித்தே ஆவார்கள்.

நடேசனின் இழப்பை ஊடகவியலாளர்களால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தாலும், ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் துணிவோடு தமிழ்த் தேசியத்தின் விடிவுக்காக உறுதியோடு குரல் கொடுக்கும் நிலை தொடர வேண்டும் இதுவே விடுதலைப் புலிகளின் விருப்பமாகும்.

இந்தக் கொலை சம்பந்தமாக விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுப்பார்கள். எமது தேசியத் தலைவரும் இந்தப் படுகொலை குறித்து மிகவும் வேதனையடைந்திருக்கிறார். அவர்சார்பாகவும், எமது அமைப்புக்கள் சார்பாகவும், நடேசனின் குடும்பத்தினருக்கும், ஊடகவியலாளர் சமூகத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும், அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்-என்றார் அவர்.

(அ-3)

## புலிகளின்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

தெரியாத நபர்களால் கிரனேட் வீசியே இந்த அலுவலகம் தாக்கப்பட்டது.

இவ்வேளையில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் எவரும் அங்கு இல்லாததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆனாலும், கட்டடம் முற்றாகச்சேதமடைந்தது.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(க)

## பூங்காவன உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பூங்காவனத் திருவிழா இன்று நண்பகல் இடம்பெறும் விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும்.

## யுத்தநிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணுகின்றார்.

ஆனால், ஓர் இனத்துக்கான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து இராணுவ, அரசியல் ரீதியிலே அந்தப் போராட்டத்தின் உச்சியிலே நிற்கும் ஓர் அமைப்பு, நீண்டகாலம் இப்படி பலன் ஏதுமின்றி - பயனேதுமின்றி - யுத்தநிறுத்தத்தை நீடிப்பது அந்த இயக்கத்துக்கும் விடுதலைப் போராட்ட கட்டுக்கோப்புக்கும் பெருமபாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதியும், அவரது அரசுத் தரப்பினரும், அவர்களது ஆலோசகர்களும் எண்ணுகின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

இப்படி யுத்தநிறுத்தத்தை நீடித்துக்கொண்டு கருணா விவகாரம் போன்ற விடயங்கள் மூலம் புலிகளைச் சீண்டி, புலிகள் அமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தவும் அரசு ஆழமான திட்டத்தைத் தீட்டியிருக்கிறது என்று புலிகளின் தலைமை கருதுகின்றது.

கிழக்கில் அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் இத்தகைய நீண்டதொரு திட்டத்தின் அங்கங்களே என்றும் புலிகள் கருதுகின்றனர்.

எனவே, இப்படி நீண்டகாலத்துக்கு இழுபடமுடியாது. ஒன்றில் அமைதிப பேச்சுக்கள் நடக்கவேண்டும். இல்லையேல் கடும் முடிவு ஒன்று எடுக்கவேண்டிய நிலைக்கு புலிகளின் தலைமை தள்ளப்படும். இதுவே புலிகளின் தலைமைக்குள்ள ஒரே வழி. இனிவரும் காலத்தில் ஒவ்வொரு சம்பவமும் - விடயமும் - இத்தகைய கடும்போக்கில்தான் அணுகப்படும்.

- இப்படி விடுதலைப் புலிகளின் தலைமை கருதுகின்றது என்ற செய்தி நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் சந்தித்தபோது, அவர்களிடம் தமிழ்ச்செல்வனே நேரடியாகத் தெரிவித்தார் என அறியவந்தது. அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாக ஆக்கபூர்வமாக முடிவு எடுக்காமல் காலத்தை இழுத்தடிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தந்திரோபாயம், விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரனை கடுஞ் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருப்பதாகவும் அறியவந்தது.

## ஜே.வி.பி. - சுதந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரவு ஏழு மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் நள்ளிரவு 12 மணி வரை நீடித்தன.

பேச்சுக்களின் போது, நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு இரு கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை ஜே.வி.பியினர் விவரமாகப்பட்டியலிட்டு சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. அதே வேளை, சுதந்திரக்கட்சியின் சார்பிலும் அதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

"புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்படும்போது இரு கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இதனை எதிர்க்கட்சிகள் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு கூட்டமைப்பை சிதைக்கும் முயற்சியில் ஈடுபடலாம். இதற்கான வாய்ப்புக்களை நாமே ஏற்படுத்தி விடக்கூடாது"- என வீரவன்ச அங்கு சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் இப்படியான முரணபாடுகள் ஏற்படாமல் தவிர்க்கவும், இரு கட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்தவும் இரு கட்சிகளையும் உள்ளடக்கிய உயர்மட்டக்குழு ஒன்றை அமைத்துச் செயற்பட இரு சாராரும் இணக்கம் கண்டனர். இக்குழு இன்னும இரு தினங்களில் அமைக்கப்படும்.

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விடயம் தொடர்பாகவும் பேச்சுக்களின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரதமர் நீங்கலாக 35 பேர்மட்டுமே அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதற்கேற்ப பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுதந்திரக் கட்சி சார்பாகச் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதேவேளை நாடாளுமன்றத்தில அறுதிப்பெரும்பான்மையை ஏற்படுத்துவதற்காக மாற்றுக்கட்சிகளை இணைத்துக்கொள்ளும் போது அவற்றுக்கும் அரச நிர்வாகத்தில் பங்களிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என சுதந்திரக்கட்சி சார்பாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம் அவசியம் ஏற்படும் போது பரிசீலிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, இப்பேச்சுக்களின் ஆரம்பத்தில் புலிகளுடனான சமாதானப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அப்போது சமாதான செயலகத்தின் தலைவர் ஜயந்த தனபாலவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பாலபட்ட பெந்தியும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளபடியும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு அமையவும் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என ஜே.வி.பி. தரப்பில் கூறப்பட்டது. பேச்சுக்களின் அட்டவணை தயாரிப்பதில்தான் சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இது தொடர்பாக மீண்டும் பேசப்படும் என தீர்மானிக்கப்பட்டது. (க)

## நடேசனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லையில் வைத்து மாலை 4.25 மணியளவில் நடேசனின் பூதவுடலை விடுதலைப் புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பொறுப்பேற்றார். வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானவேல் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு வந்திருந்தனர்.

'பாண்ட்' வாத்தியத்துடன் ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட பூதவுடல் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றபின் பூதவுடல் 6.45 மணியளவில் கிளிநொச்சிக்கு வாகன அணியாக எடுததுச் செல்லப்பட்டது. கிளிநொச்சியில உள்ள ஊடகப் பிரிவில் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்றிரவு வைக்கப்பட்டிருந்தது. அதையடுத்து இன்று காலை அஞ்சலிக்கூட்டம் ஒன்று அங்கு இடம் பெறும்.

அதன்பின் யாழ்ப்பாணத்துக்குப் பூதவுடல் எடுத்துவரப்படும்.

இறுதி நிகழ்வுகளை ஒட்டி இன்று நாளாந்தப்பணிகளை முடக்கி பூரண துக்கதினம் அனுஷ்டிக்கும்படி ஊடகவியலாளர் அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்களை நடத்த வேண்டாம் என்று தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

தனியார் பஸ்சேவைகளை இன்று முற்றாக நிறுத்துமாறு யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் கோரியுள்ளது.

வடபிராந்திய முச்சக்கரமோட்டார் ஊர்திச் சேவைச் சங்கமும் இன்று முற்றாகத் தனது சேவை நிறுத்தப்பட்டுள்ளது என அறிவித்துள்ளது.

மக்களை கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு பூரண துக்கதினம் அனுஷ்டிக்கும்படி பொதுநிறுவனங்களின் அமைப்புக்கள் கோரியுள்ளன.

(எ-3-15)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளன. பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து அமைத்துள்ள ஏற்பாட்டுக் குழு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக நாளைதினம் வியாழக்கிழமை குடாநாடு தழுவியதாக கண்டனப்பேரணிகள் இடம்பெறவுள்ளன.

சகலரும் தமது செயற்பாடுகளை நிறுத்தி ஒட்டுமொத்தமாக இந்தப் பேரணியில் கலந்து கொள்வர்.

(எ-3)

A/L 2005
DAY CLASS
[2004 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு]
கணித, விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்: 07.06.2004
திங்கள் 9.00 a.m.
CHE. Mr.DIAS.
C.Maths. Mr.RAJAN
PHY. Mr.SPELMAN
BIO. Mr.THATPARAN
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

SUBRA(14)
சித்தன்கேணி
SPOKEN ENGLISH and GRAMMAR
பிரிவு II
By: BRITTO
ஆரம்பம்: 02.06.2004
புதன் காலை 7.00 மணி.
(சி-35019)

ENGLISH
SPOKEN AND GRAMMAR
BY.BRITTO
புதிய பிரிவு
சனி/ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 05.06.2004
இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி [பட்டப்படிப்பு பிரிவு]
(யாழ்போதனா வைத்திய சாலை முன்னால்)
நேரம்:- 2.30 (புதிய நேரம்)
(சி35240)(37)

SPOKEN ENGLISH & GRAMMAR
BY: S.B.Sasi
பிரிவு I : சனி, ஞாயிறு 3.30-5.00 p.m.
பிரிவு II : திங்கள், புதன், வெள்ளி 3.00-4.00 p.m.
பிரிவு III : செவ்வாய், வெள்ளி 6.00-7.30 p.m.
O/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிற்கு பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் யாவும் 05-06-2004 ஆரம்பம்.
NEW HARY'S INSTITUTE
Vaddukoddai Road, (32594) (37-11-16) Sithankerny.

A/L 2006
C/Ma. Mr.தவசேகர் B.Sc.,Dip-in-Edu.
CHE. Mr.ஜெயந்தன்,B.Sc
PHY. பிரபல ஆசிரியர்
ENG. Mr.ஜெயக்குமார்B.A.
SHAMROCK
J/ஈச்சமோட்டை

நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12.06.1950
மறைவு 15.05.2003
திருமதி
துரைராசா சிவயோகி
ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்
காலத்தின் கோலத்தால் நீங்கள் கரைந்தபோது...
உங்கள் நினைவில் எங்கள் இதயம் என்றும் துடிக்கிறது.
இணுவில் மேற்கு, இணுவில்.
(32669)(37-11-16)
- குடும்பத்தினர்.





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.